# உதயன்

விலை ரூபா 6.00

ர:15 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 15 ஞாயிற்றுக்கிழமை (01-10-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:240


## பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா தாக்குதலில் உயிர் தப்பினார்!

### வாகன அணி மீது சரமாரியாக வேட்டு

மட்டக்களப்பு,ஒக.1

பிரதி அமைச்சரும் தேசிய ஐக்கிய முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா பயணம் செய்த வாகன அணி மீது நேற்று மாலை இனந்தெரியாதோர் நடத்திய சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தில் அதிர்ஷ்டவசமாக அவர் உயிர் தப்பினார்; அவருடன் சென்ற பொலீஸார் மூவர் காயமடைந்தனர்.

நேற்று வாழைச்சேனைப் பகுதியில் தேர்தல் பிரசார வேலைகளில் ஈடுபட்டிருந்த அமைச்சரும் அவரது சகாக்களும் நான்கு வாகனங்களில் அங்கிருந்து காத்தான்குடிக்குத் திரும்பிக் கொண்டிருந்தவேளை இச்சம்பவம் இடம்பெற்றது.

மாலை 6.40 மணியளவில் மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் கோரக்கல்லிமடு என்ற இடத்துக்குச் சமீபமாக இந்த வாகன அணி சென்று கொண்டிருந்த பொழுது வாகனங்களை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. பிரதி அமைச்சரின் வாகனத்துக்கு முன்பாகச் சென்று கொண்டிருந்த பொலீஸாரின் வாகனத்தையே பெரும்பாலான வேட்டுக்கள் தாக்கின. அதிலிருந்த மூன்று பொலீஸார் காயமடைந்தனர்.

காயமடைந்த மூவரும் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். பிரதி அமைச்சர் குண்டு துளைக்காத காரில் சென்றதால் தப்பியதாகச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது. (ஐ-5-8)

## சாவகச்சேரி நகர வங்கிகளின் ஆவணங்கள் நேற்று மீட்பு!

யாழ்ப்பாணம்,ஒக்.1

சாவகச்சேரி நகரில் உள்ள இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் கிளைகளில் கடந்த நான்கு மாத காலமாகக் கைவிடப்பட்டிருந்த முக்கிய ஆவணங்கள் மற்றும் பணம் என்பன நேற்று அங்கிருந்து மீட்கப்பட்டன.

படையினரின் அனுமதியுடன் அங்கு சென்ற வங்கி அதிகாரிகள் இவற்றை மீட்டு வந்தனர்.

இலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளர் க.பாலசுப்பிரமணியமும் மாகாணப் பிரதிப் பாதுகாப்பு உத்தியோகத்தர் டபிள்யூ. அபயவர்த்தனாவும் படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதை அடுத்து ஆவணங்களை மீட்டுவர அனுமதி வழங்கப்பட்டது.

சேதமடைந்து காணப்பட்ட இலங்கை வங்கிக் கட்டடத்தின் இடிபாடுகளிடையே முக்கிய ஆவணங்களும் சுமார் 27லட்சம் ரூபா ரொக்கப் பணமும் பாதுகாப்பாக இருக்கக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. தேசிய சேமிப்பு வங்கியின் முக்கிய ஆவணங்களும் சேதமடையாமல் இருந்தன.

நேற்று முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி நகருக்குச் சென்ற வங்கி அதிகாரிகள் ஆவணங்களை மீட்டுக் கொண்டு பிற்பகலில் அங்கிருந்து திரும்பினர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி லண்டன் பயணம்

கொழும்பு,ஒக்.1

மருத்துவ சிகிச்சை மற்றும் தனிப்பட்ட அலுவல்களுக்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிநாடு சென்றுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அவர் ஒருவார காலம் லண்டனில் தங்கி இருப்பார் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. தேர்தல் நெருங்குவதால் விரைவிலேயே அவர் நாடு திரும்பிவிடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வெளிநாடு புறப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதி சிரேஷ்ட அமைச்சர்களைச் சந்தித்தார். தேர்தல் வேலைகளில் ஈடுபடும் ஆளும் கட்சி

(16ஆம் பக்கம் பார்க்க)

## சிறுப்பிட்டியில் ஷெல் வீழ்ந்து இளைஞன் காயம்

யாழ்ப்பாணம்,ஒக.1

புத்தூர் சிறுப்பிட்டிப் பகுதியில் நேற்று மாலைமணியளவில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

அச்சுவேலி ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த சின்னத்துரை சுதா (வயது25) என்பவரே காயமடைந்தவர். அச்சுவேலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார்.

இதேவேளை -

பலாலியை அண்டிய பகுதிகளிலும் நேற்று ஷெல்கள் வீழ்ந்ததாகத் தெரியவருகிறது. (ஐ-5-8)

## தென்மராட்சி போர்ப் பிரதேசத்தில் இருந்து வெளியேறி

# வரணியில் சிக்குண்டிருந்த மக்கள் நேற்று வடமராட்சிக்குச் சென்றனர்!

## கொட்டும் மழைக்கு மத்தியில் முள்ளி முகாம் ஊடாக அனுமதி

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர் 1

**கடும் சண்டை நடைபெறும் தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இருந்து வெளியேறி அப்பால் செல்ல முடியாத நிலையில் வரணிப் பகுதியில் திரண்டிருந்த ஆயிரக் கணக்கான மக்கள் நேற்று முள்ளி ஊடாக வடமராட்சி செல்ல அனுமதிக்கப்பட்டனர்.**

ஷெல் வீச்சுக்கள் மற்றும் வான் தாக்குதல்களுக்கு அஞ்சி தமது வதிவிடங்களில் இருந்து அவசர அவசரமாக வெளியேறிய இவர்கள் நேற்று முன்தினம் வரணிப்பகுதியில் திரண்டபோதும் முள்ளிச் சந்திக்கு அப்பால் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இதனால் கொட்டும் மழைக்கு மத்தியில் ஆயிரக்கணக்கானோர் வரணிப் பகுதியிலேயே அன்றைய

(16ஆம் பக்கம் பார்க்க)

## 'ஓயாத அலைகள்' நடவடிக்கை ஐ.தே.க - புலிகளின் கூட்டுச் சதி!

### ஆளுங்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக்.1

தேர்தல் நெருங்கும் வேளையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து புலிகள் மேற்கொண்டுள்ள சூழ்ச்சித் திட்டமே 'ஓயாத அலைகள் - 4' நடவடிக்கையாகும் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஊடகப் பிரிவு குற்றஞ்சாட்டியுள்ளது.

புலிகள் கடந்த 26 ஆம் திகதி ஆரம்பித்துள்ள புதிய தாக்குதல் நடவடிக்கை ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்கும் வகையிலும் அதன் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையிலும் அமைந்ததாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்திலும் விடுதலைப் புலிகள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தமது கைவரிசையைக் காட்டியிருந்தனர் - என்றும் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-ரி)

## ஊரடங்கு தளர்வு

யாழ்ப்பாணம்,ஒக்.1

குடாநாட்டில் அமுல் செய்யப்பட்டுவரும் இரவு ஊரடங்கு நேரம் மேலும் தளர்த்தப்பட்டிருப்பதாக யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தின் கட்டளை அதிகாரி அறிவித்துள்ளார்.

இதன்படி இனிமேல் இரவு எட்டு மணி முதல் காலை ஐந்து மணி வரை ஊரடங்கு அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அமுலுக்கு வந்த இந்த நடைமுறை மறு அறிவித்தல் வரை தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தென்மராட்சிப் பகுதியில் நேற்று யுத்தம் ஓரளவு தணிந்திருந்தது!

யாழ்ப்பாணம்,ஒக்.1

தென்மராட்சி மற்றும் நாகர்கோயில்பகுதிகளில் - அறுமுனைகளில் - படைநிலைகள் மீது கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலைப் புலிகள் ஆரம்பித்திருந்த 'ஓயாத அலைகள் - 4' இராணுவ நடவடிக்கை நேற்று - முன்னிரவு வரை - ஓரளவு தணிந்திருந்தது.

புலிகளும், படையினரும் மாறி, மாறி, பீரங்கி, ஷெல் தாக்குதல்களில் அவ்வப்போது ஈடுபட்டதைத் தவிர, ஊடுருவல் தாக்குதல் ஏதும் பெரிய அளவில் இடம்பெறவில்லை எனப் படை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

கிளாலி கடற்படைத் தளத்தில் கணிசமான பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகளை மேற்

(16ஆம் பக்கம் பார்க்க)

### புலமைப் பரிசில் பரீட்சை

## யாழ். பாடசாலைகள் சிலவற்றில் சித்திபெற்றோரின் எண்ணிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.1

கடந்த ஓகஸ்டில் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் உள்ள சில பாடசாலைகளில் சித்திபெற்றவர்களின் எண்ணிக்கை வருமாறு (அடைப்புக்குள் அந்தப் பாடசாலைகளிலிருந்து தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது).

★ சென்ஜோன் பொஸ்கோ - 59 (145)
★ யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை - 52 (161)
★ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை - 36 (107)
★ நெல்லியடி எம்.எம்.ரி.எம்.எல். - 25 (71)
★ யாழ். இந்து மகளிர் ஆ. பாடசாலை - 24 (75)

(15 ஆம் பக்கம் பார்க்க)

## கற்பிட்டி கடற் பிரதேசத்தில் கடற்படைப் படகு மூழ்கடிப்பு!

### இரு மாலுமிகளைக் காணவில்லை

கொழும்பு,ஒக்.1

புத்தளம் மாவட்டம் கற்பிட்டிப் பகுதியின் - குதிரைமலைக்கு அப்பால் - உள்ள கடற்பகுதியில் நேற்று நண்பகல் விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையே கடும் மோதல் இடம்பெற்றிருக்கிறது. இதில் கடற்படைப் படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டது. அதிலிருந்த ஐந்து கடற்படை மாலுமிகள் மீட்கப்பட்டதாகவும், இருவர் காணாமற்போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மீனவர்களின் படகுகளுடன் சென்றுகொண்டிருந்த புலிகளின் படகை இனங்கண்டு கடற்படையினர் அதன் மீது தாக்குதல் நடத்திய வேளை சண்டை மூண்டதாகவும் -

கடற்படையினரின் தாக்குதலில் புலிகளின் படகு ஒன்று முற்றாக அழிக்கப்பட்டதாகவும் -

அதிலிருந்த புலிகள் அனைவரும் கொல்லப்பட்டதாகவும் இராணு

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்.குடாநாட்டிலிருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 30ஆம் திகதிவரை) பதிவிலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

| | |
|---|---|
| 513/15540/A | 513/15540/B |
| 513/15540/C | 513/157758/A |
| 513/157758/B | 513/158797/A |
| 513/158863/A | 513/158864/A |
| 513/158931/A | 513/158931/B |
| 513/158931/C | 513/160738/A |
| 513/160789/A | 513/160790/A |
| 513/160790/B | 513/161736/A |
| 513/161736/B | 513/161736/C |
| 513/161736/D | 513/161736/F |
| 513/161959/A | 513/161959/B |
| 513/161959/C | 513/161959/D |
| 513/161959/E | 513/164380/A |

## யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 513/163945/A | 513/163945/A1 |
| 513/163945/A2 | 513/163945/A3 |
| 513/163945/A4 | 513/163945/A5 |
| 513/163945/A6 | 513/163945/A9 |
| 513/163945/B | 513/163945/B1 |
| 513/163945/B2 | 513/163945/B3 |
| 513/163945/B4 | 513/163945/B5 |
| 513/163945/B6 | 513/163945/B7 |
| 513/163945/B8 | 513/163945/B9 |
| 513/163945/C | 513/163945/C1 |
| 513/163945/C2 | 513/163945/C3 |
| 513/163945/C4 | 513/163945/C5 |
| 513/163945/C6 | 513/163945/C7 |
| 513/163945/C8 | 513/163945/C9 |
| 513/163945/D | 513/163945/D1 |
| 513/163945/D2 | 513/163945/D3 |
| 513/163945/D4 | 513/163945/D5 |
| 513/163945/D6 | 513/163945/D7 |
| 513/163945/E | 513/163945/F |
| 513/163945/G | 513/163945/H |
| 513/163945/I | 513/163945/J |
| 513/163945/K | 513/163945/L |
| 513/163945/M | 513/163945/N |
| 513/163945/O | 513/163945/P |
| 513/163945/Q | 513/163945/R |
| 513/163945/S | 513/163945/T |
| 513/163945/U | 513/163945/V |
| 513/163945/W | 513/163945/X |
| 513/163945/Y | 513/163945/Z |
| 512/144558/A | 512/144702/A |
| 512/147953/A | 512/149869/A |
| 512/150043/A | 512/150097/A |
| 512/150133/A | 512/150133/B |
| 512/150241/A | 512/152328/A |
| 512/152328/B | 512/152382/C |
| 512/152825/A | 512/152825/B |
| 512/153016/A | 512/153016/B |
| 512/153016/C | 512/153016/D |
| 512/153016/E | 512/153067/A |
| 512/153067/B | 512/154035/A |
| 512/154035/B | 512/154289/A |
| 512/154289/B | 512/154289/C |
| 512/156336/A | 512/156336/B |
| 512/156336/C | 512/156372/A |
| 512/159066/A | 512/159066/B |
| 512/159066/C | 512/159095/A |
| 512/159174/A | 512/159174/B |
| 512/159195/A | 512/159195/B |
| 512/161186/A | 512/161186/B |
| 512/161306/A | 512/161306/B |
| 512/161369/A | 512/161369/B |
| 512/161369/C | 512/163435/A |
| 512/163435/B | 512/163435/C |
| 512/163480/A | |

## கோப்பாய்

| | |
|---|---|
| 511/154586/A | 511/154586/B |
| 511/156821/A | 511/157257/A |
| 511/157257/B | 511/157267/A |
| 511/159580/A | 511/159580/B |
| 511/159580/C | |

## நல்லூர்

| | |
|---|---|
| 513/138284/A | 513/155396/A |
| 513/155396/B | 513/160771/A |
| 513/160771/B | 513/161554/A |
| 513/161554/B | 513/161554/C |
| 513/161554/D | 513/161554/E |
| 513/161625/A | 513/161625/B |
| 513/161625/C | 513/161706/A |
| 513/161706/B | 513/164068/A |
| 513/164068/B | 511/154390/A |
| 511/154933/A | 511/157234/A |
| 511/157243/B | 511/157645/A |
| 511/157645/B | 512/144391/A |
| 512/144391/B | 512/144391/C |
| 512/144391/D | 512/144574/A |
| 512/144574/B | 512/144574/C |
| 512/144574/D | 512/144574/E |
| 512/144574/F | 512/144574/G |
| 512/144574/H | 512/144580/A |
| 512/144580/B | 512/144580/C |
| 512/150064/A | 512/150064/B |
| 512/150144/A | 512/150144/B |
| 512/150144/C | 512/150144/D |
| 512/152456/A | 512/152456/B |
| 512/152477/A | 512/152477/B |
| 512/152477/C | 512/152477/D |
| 512/152477/E | 512/152477/F |
| 512/152881/C | 512/156447/A |
| 512/156447/B | 512/156454/A |
| 512/159008/A | 512/159008/B |
| 512/159008/C | 512/159025/A |
| 512/159115/A | 512/159115/B |
| 512/159115/C | 512/161398/A |
| 512/161398/B | 512/163294/A |
| 512/163339/A | 512/163339/B |
| 512/163339/C | 512/163355/A |

## சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 513/147027/A | 513/151958/A |
| 513/151958/B | 513/157854/A |
| 513/158641/A | 513/158641/B |
| 513/158641/C | 513/158641/D |
| 513/158641/E | 513/158692/A |
| 513/158692/B | 513/158967/A |
| 513/158974/A | 513/158974/B |
| 513/160574/A | 513/160574/B |
| 513/160574/C | 513/160575/A |
| 513/160589/A | 513/160730/A |
| 513/160730/B | 513/160730/C |
| 513/160730/D | 513/160730/E |
| 513/160730/F | 513/160791/A |
| 513/160932/A | 513/160932/B |
| 513/161509/A | 513/161509/B |
| 513/161576/A | 513/161576/B |
| 513/161601/A | 513/161601/B |
| 513/161602/A | 513/161603/A |
| 513/161610/A | 513/161622/A |
| 513/161622/B | 513/161629/A |
| 513/161690/A | 513/161690/B |
| 513/161777/A | 513/161777/B |
| 513/161788/A | 513/161788/B |
| 513/161953/A | 513/161954/A |
| 513/161954/B | 513/161954/C |
| 513/164308/A | 513/164308/B |
| 513/164342/A | 513/164342/B |
| 513/164359/A | 513/164361/A |

## தெல்லிப்பழை

| | |
|---|---|
| 513/160807/A | 513/160807/B |
| 513/160807/C | 513/160807/D |
| 513/160838/A | 513/160895/A |
| 513/160895/B | 513/161652/A |
| 513/161653/A | 513/161653/B |
| 513/161653/C | 513/161653/D |
| 513/161753/A | 513/161830/A |

## தென்மராட்சி

511/145461/A

## உடுவில்

| | |
|---|---|
| 513/150525/A | 513/158729/A |
| 513/158729/B | 513/158729/C |
| 513/158729/D | 513/158820/A |
| 513/158821/A | 513/158822/A |
| 513/158822/B | 513/158822/C |
| 513/158822/D | 513/158822/E |
| 513/158822/F | 513/158822/G |
| 513/160472/A | 513/160548/A |
| 513/160548/B | 513/160645/A |
| 513/160645/B | 513/160903/A |
| 513/161674/A | 513/161674/B |
| 513/161674/C | 513/161674/D |
| 513/161793/A | 513/163945/1 |
| 513/163945/2 | 513/163945/3 |
| 513/163945/4 | 513/163945/5 |
| 513/163945/6 | 513/163945/7 |
| 513/163945/8 | 513/163945/9 |
| 513/164034/A | 513/164267/A |
| 513/168930/A | 513/168930/B |
| 513/168930/C | 511/157259/A |
| 511/157264/A | 511/157264/B |
| 511/157464/A | 511/157464/B |
| 511/157471/A | 511/157471/B |


**இலங்கை வங்கி**

**அறிவித்தல்**

**சாவகச்சேரிக் கிளை**

கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக சாவகச்சேரியில் சிக்குண்டிருந்த சில முக்கிய ஆவணங்கள் மீட்கப்பட்டுவிட்டன. இந்த ஆவணங்களை நெறிப்படுத்தி வழமையான வங்கிச் சேவைகளை எமது வாடிக்கையாளர்களுக்கு மிக விரைவில் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால்,

**பருத்தித்துறையில் தற்காலிகமாக இயங்கும் எமது சாவகச்சேரிக் கிளை**

02-10-2000 திங்கள் முதல் 06-10-2000 வெள்ளிவரை வாடிக்கையாளர்களுக்காக மூடப்பட்டிருக்கும் என்பதை இத்தால் தெரியப்படுத்துகின்றோம். இதனால் வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

09-10-2000ஆம் திகதி திங்கள் முதல் சாவகச்சேரி வங்கிக்கிளையின் நடவடிக்கை பற்றிய விவரங்கள் மீண்டும் அறிவிக்கப்படும்.

வாடிக்கையாளர் சேவையே எமது திருப்தி.

*பிரதேச முகாமையாளர்,*
*இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.* (C/13151)





**நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்**
**2000-10-10**
**யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்**
தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளரான
தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்
**திரு.சி.சிவமகாராசா**
அவர்களை ஆதரியுங்கள்.



இல. 11

**தமிழர் விடுதலைக் கூட்டணி** X

1 2 3 4 5 6 7 8 9 10 11 12

உதயசூரியன் சின்னத்திற்கு நேரே புள்ளடியிட்டும் இலக்கம் 11க்கு மேலே புள்ளடியிட்டும் வெற்றிபெறச் செய்வதுடன் மேலும் விரும்பிய இரு இலக்கத்திற்கு மேல் புள்ளடியிடலாம். (78902)





**நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2000**

(01) தமிழ் மக்களின் அபிலாசைகள் அனைத்தையும் உள்ளடக்கிய காத்திரமான அரசியல் தீர்வுக்காக குரல் கொடுக்க-
(02) போரை நிறுத்தும்படி வலியுறுத்தவும்-
(03) போரினால், அகதிகளாக்கப்பட்டு அகதிமுகாம்களில் அடிப்படை வசதிகள் இல்லாது அவதியுறும் ஆயிரக்கணக்கான மக்களின் துயரங்களை அவர்களின் இதய உணர்வலைகளை அக்கறையுடன் எடுத்துரைக்க-
(04) உங்கள் துயரங்களை உங்கள் மீதான அட்டூழியங்களை நேர்மையுடனும், நெஞ்சுரத்துடம் உலகிற்கு வெளிப்படுத்த-
(05) சமாதானத்தினதும், மனிதநேயத்தினதும், தமிழ் தேசியத்தினதும் விசுவாசமான குரலாக நாடாளுமன்றத்தின் உள்ளும் புறமும் ஒலிக்க - உங்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றேன்.

**தமிழர் விடுதலைக் கூட்டணி** X

க.சி.பாலகிருஷ்ணன் J.P.U.M.
சட்டத்தரணியும்,
உத்தியோகப் பற்றற்ற நீதிவானும்.

உங்கள் விருப்பு வாக்கு ஒன்றினை இல.4 க்குப் போடுங்கள்.



க.சி.பாலகிருஷ்ணன்

இல. 4

1 2 3 4 5 6 7 8 9 10 11 12

(78241)



**ஸ்ரீ செல்வா சினிமா**
ஸ்ரான்லி வீதி
அர்ஜுன், மீனா
நடித்த
**ரிதம்** (C.D.பிரதி)
புதிய வெளியீடு
10.30., 2.00 (ப.நே)

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
விஜய், சிம்ரன், மணிவண்ணன்
நடிப்பில்
**துள்ளாத மனமும் துள்ளும்**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
கார்த்திக், ரோஜா, அஜித்
மற்றும் பலரின் நடிப்பில்
**உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்**
காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே)



**சுயேச்சைக் குழு - இல. 3 (ஸ்ரீ ல.சு.கட்சி)**



நாடும், வீடும், ஏடும் சொல்லும்
நாமே சந்திரிகாவின்
ஏகப் பிரதிநிதி!

ஊரும் உலகும்
ஏற்றுவிட்டது எமது வெற்றியை
மக்கள் எம் பக்கம்! வெற்றி நம் பக்கம்!!



வேல்முருகு தங்கராஜா
இல. 11

கிருஷ்ணசாமி முத்துக்குமார் (குமார்)
இல. 5

(78907)

# ராஜ்குமார் விடுதலை முயற்சி தோல்வி; காட்டிலிருந்து திரும்பினார் கோபால்!

சென்னை,ஒக்டோபர் 1

**நாகப்பா தப்பிச் சென்றதால் வீரப்பன் கடுங்கோபம் அடைந்திருப்பதாகவும், அதனால் ராஜ்குமாரின் விடுதலையில் தனது முயற்சி தோல்வியடைந்ததாகவும், காட்டிலிருந்து சென்னை திரும்பிய "நக்கீரன்" கோபால் தெரிவித்தார்.**

கன்னட நடிகர் ராஜ்குமார் உட்பட 3பேரை 50நாள்களுக்கும் மேலாக பணயம் வைத்துள்ள சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனி



'நக்கீரன்' கோபால்

டம் தமிழக, கர்நாடக அரசுகளின் தூதராக 4ஆவது முறையாகச் சென்றிருந்த 'நக்கீரன்' கோபால் நேற்றுக் காலை சென்னை திரும்பி முதல்வர் கருணாநிதியுடன் ஆலோசனை நடத்தினார்.

அதன்பின்னர், செய்தியாளர்களைச் சந்தித்த கோபால், வீரப்பனின் நிபந்தனைகளை நிறைவேற்ற இருமாநில அரசுகளும் மேற்கொண்டுள்ள கடும் முயற்சிகளை வீரப்பனிடம் விளக்கியபோது அவன் திருப்தியடைந்ததாகவும், -

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ராஜ்குமார் உட்பட அனைவரையும் மீட்டுக்கொண்டு சென்னை திரும்பும் நம்பிக்கையில் தான் இருந்ததாகவும - ஆனால் நாகப்பா தப்பியது வீரப்பனுக்குக் கடும்கோபத்தை ஏற்படுத்தியதால் தனது முயற்சி தோல்வியடைந்ததாகவும் தெரிவித்தார்.

நாகப்பா தப்பியதை அடுத்து வீரப்பன் ஆத்திரத்துடன், ராஜ்குமாரையும் மற்றவர்களையும் அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் கொண்டு சென்று விட்டதாகவும் -

வீரப்பனின கோபத்தை உணர்ந்து கொண்டதால் தான் சென்னைக்குத் திரும்பி விட்டதாகவும் கோபால் கூறினார்.

இதேசமயம், நாகப்பா தப்பி வந்தது ராஜ்குமாரை விடுவிக்கும் பணியில் பின்னடைவை ஏற்படுத்தி யுள்ளதாகத் தெரிவித்த முதல்வர் கருணாநிதி, இனி வீரப்பனிடமிருந்து தகவல் வந்தால் மட்டுமே கோபால் காட்டுக்குச் செல்வார் என்று கூறியுள்ளார்.

## உலக அரங்கில்

## ஷெரீப் தரப்புக் கோரிக்கை நிராகரிப்பு!

இஸ்லாமாபாத்,ஒக்.1

பாகிஸ்தானின் பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு விதிக்கப்பட்டுள்ள ஆயுள்தண்டனை மீதான மேன்முறையீட்டு மனுவின் விசாரணையின்போது இராணுவ ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப்பை சாட்சியாக விசாரிக்கக் கோரும் ஷெரீப் தரப்புக் கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. இந்தக் கோரிக்கை விசாரணைகளைக் காலதாமதப்படுத்தும் செயல் எனத் தீர்ப்பில் நீதிபதி குறிப்பிட்டுள்ளார். (ஒ)

## நெதர்லாந்தில் விபசாரம் சட்டபூர்வமாக அங்கீகரிப்பு!

ஹேக்,ஒக்.1

நெதர்லாந்தில் விபசாரம் சட்டபூர்வமான தொழிலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான அரசு ஆணை இன்று முதல் அமுலுக்கு வருகிறது.

இனிமேல் நெதர்லாந்தில் மற்றைய தொழில்களைத் தொடங்குவதற்கு அந்தந்தப்பகுதி நிர்வாக அலுவலகங்களில் பதிவுசெய்வது போன்று, விபசாரத் தொழிலில் ஈடுபடுபவர்களும் தமது பெயர்களை பதிவு செய்து அரசாங்கத்தால் வழங்கப்படும் தொழில் அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் -

இவர்கள் விதிமுறைகளுக்கு ஏற்ப, குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை மருத்துவப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நெதர்லாந்தில் சுமார் 25ஆயிரம் விலைமாதர்கள் இருப்பதாகவும்-விபசாரம் தொழிலாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதால் விலைமாதர்கள் வருமானவரி கட்டியாகவேண்டும் என்றும் கூறப்படுகிறது. (ஓ-8)

## நலம் தரும் நடவடிக்கைகள்

உலக உளநல நாள் ஒக். 10



1. நீங்கள் யார் என்பதை ஏற்றுக்கொள்ளுதல்

எங்களுடைய பண்பாடு, பின்னணி, சமயம், ஆண் - பெண் என்ற நிலை, நம்பிக்கைகள், அனுபவங்கள் என்பவற்றின் கூட்டுச்சேர்க்கையே நாம்.

நீங்கள் உட்பட ஒவ்வொரும் மரியாதைக்குரியவர்கள்

## சுப்பிரமணிய சுவாமியின் கட்சிக்குத் தேர்தல் ஆணைய அங்கீகாரம் ரத்து

புதுடில்லி,ஒக்.1

சுப்பிரமணிய சுவாமியின் தலைமையிலான ஜனதாக் கட்சிக்கு அளித்திருந்த மாநிலக் கட்சிக்கான அங்கீகாரத்தை இந்தியத் தேர்தல் ஆணையம் ரத்துச் செய்துள்ளது.



சுப்பிரமணிய சுவாமி

ஆணைய விதிகளின்படி, மாநிலத் தேர்தலில் பதிவாகும் மொத்த வாக்குகளில் குறைந்தபட்சம் 6சதவீத வாக்குகளை பெற்றாலோ அல்லது மொத்த எண்ணக்கையில் 30சட்டசபை உறுப்பினர்களுக்கு ஒருவர் என்ற வீதத்தில் உறுப்பினரைக் கொண்டிருந்தாலோ மட்டுமே தேர்தல் ஆணையம் ஒரு கட்சியை அங்கீகரிக்கும்.

கடந்த தேர்தலில் ஜனதாக்கட்சி படுதோல்வியடைந்திருந்தது. இதனால் விதிகளில் எதையும் நிறைவேற்ற அக்கட்சி தவறியதால் அங்கீகாரத்தை இழந்துள்ளது.

இதேபோல் இதுவரை காலமும் தேசியக்கட்சியாக இருந்த இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, 25 உறுப்பினர்களுக்கு ஒரு உறுப்பினர் என்று வீதத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெறத் தவறியதாலும் கேரளா, திரிபுரா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் மட்டும் 6 சதவீத வாக்குகளுக்கு மேல் பெற்றிருப்பதாலும் அது மாநிலக்கட்சியாக மட்டும் அங்கீகாரம் பெறுகிறது. (ஒ)

## பில் கிளின்ரன் மீது மற்றொரு பெண் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்!

வாஷிங்ரன்,ஒக்.1

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன், அவரது மனைவி ஹிலாரி மற்றும் வெள்ளை மாளிகை அதிகாரிகள் ஆகியோர் தனது தனிமையையும் உரிமைகளையும் மீறியதாக முன்னாள் வெள்ளை மாளிகை ஊழியரான கத்லீன் வில்லி ச்விக்கர் வாஷிங்ரன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளார்.



பில் கிளின்ரன்

1993ஆம் ஆண்டு அதிபர் அலுவலகத்தில் பணிபுரிந்த சமயம் தன் மீது பாலியல் சேஷ்டைகளில் கிளின்ரன் ஈடுபட்டதாகக் கத்லீன் 1998ஆம் ஆண்டு தொலைக்காட்சிப் பேட்டியொன்றில் கூறியிருந்தார்.

இதனை அடுத்து கிளின்ரனுக்கு கத்லீன் தனிப்பட்ட நட்புமுறையில் எழுதிய கடிதங்களை வெள்ளை மாளிகை வெளியிட்டு, கிளின்ரன் தவறிழைக்க வில்லை என்று வாதிட்டது.

இது தொடர்பாகவே தற்போது தனது வாழ்வின் அந்தரங்கம் பத்திரிகைகளில் அம்பலப்படுத்தப்பட்டதாகவும், இதனால் தனது பிள்ளைகள் மன ரீதியாக உளைச்சல் அடைந்திருப்பதாகவும் - கத்லீன் வழக்குத் தாக்கல் செய்துள்ளதுடன் நஷ்டஈடும் கோரியுள்ளார். (ஒ)

## குவைத்துக்கு 73,000 கோடி ரூபா வழங்க ஈராக்கிற்கு ஐ.நா உத்தரவு!

குவைத்சிற்றி,ஒக்.1

வளைகுடாப் போரின்போது குவைத்தின் எண்ணெய் வளங்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்காக 73ஆயிரத்து 140கோடி ரூபாவை நஷ்டஈடாக ஈராக் வழங்க வேண்டும் என்று ஐ.நா. பாதுகாப்புச்சபை உத்தரவிட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் குவைத்தை ஈராக் ஆக்கிரமித்த போதும்,அதனைத்தொடர்ந்து ஏற்பட்ட வளைகுடா யுத்தத்தின் போதும் குவைத்தின் எண்ணெய் வளங்கள் பேரழிவுக்கு உள்ளாகின. பல பெற்றோலியக் கிணறுகள் மீண்டும் பயன்பெறமுடியாதவாறு தீப்பிடித்து எரிந்தன.

இந்தச் சேதங்களுக்கு நஷ்டஈடு பெற்றுத் தரும்படி குவைத் ஐ.நாவிடம் கோரியிருந்தது. இது தொடர்பாக ஐ.நா.பாதுகாப்புச் சபை முடிவெடுப்பதை பிரான்ஸ் மற்றும் ரஷ்யா போன்ற ஈராக் ஆதரவு நாடுகள் தாமதப்படுத்துவதாகக் குவைத் கூறி வந்தது.

இந்நிலையில் ஐ.நா. பாதுகாப்புச் சபை ஈராக் வழங்க வேண்டிய நஷ்டஈடு குறித்து அறிவித்துள்ளது. அத்துடன் ஈராக்கின் மசகு எண்ணெய் விற்பனைக்கு ஐ.நா. விதித்திருந்தகட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதாகவும் -

அதேசமயம்,மசகுஎண்ணெய் விற்பனை மூலம் ஈட்டும் வருமானத்தில் 30 சதவீதத்தை ஈராக் ஐ.நா. நஷ்டஈட்டுநிதிக்கு ஒதுக்க வேண்டும் என்றும் -

ஐ.நா.பாதுகாப்புச் சபை மேலும் ஆணையிட்டுள்ளது. (ஓ-8)

## இன்று ஒலிம்பிக் நிறைவு நாள்

சிட்னி,ஒக்.1

ஆஸ்திரேலியாவில் கோலாகலமாக நடைபெற்று வந்த ஒலிம்பிக் போட்டிகள் இன்றுடன் நிறைவடைகின்றன. நிறைவு விழாவில் இறுதி நிகழ்ச்சியாக ஒலிம்பிக் தீபம் உள்ளூர் நேரப்படி இரவு 10மணிக்கு அணைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து பிரமாண்டமான வாணவேடிக்கை நடைபெறவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (ஒ-8)

## கச்சதீவு மீதான தமிழக மீனவரின் உரிமைக்காகப் போராட்டம்!

இராமேஸ்வரம்,ஒக்.1

கச்சதீவில் மீன்பிடிக்கவும், வலைகளை உலர்த்தவும் தமிழக மீனவர்களுக்கு உரிமை உண்டு என்றும் -

அப்பகுதிக்குச் செல்லும் தமிழக மீனவர்களை எல்லை தாண்டிச் செல்வதாகக் கூறுவது தவறு என்றும -

இடது கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் நல்லக்கண்ணு தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினையில் மத்திய, மாநில அரசுகளின் உதாசீனப் போக்கினைக் கண்டித்து தமது கட்சி எதிர்வரும் 31ஆம் திகதி மறியல் போராட்டம் நடத்த இருப்பதாகவும் அவர் அறிவித்துள்ளார். (ஒ-8)

## இஸ்ரேலியப் பொலீஸார் சுட்டு 4பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்!

### ஜெருசலேமில் கலவர அபாயம்!!

இஸ்ரேலின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பு பலத்த மோதலாக மாறியதால், இஸ்ரேலியப் பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 4பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இதனையடுத்து அப்பகுதியில் கலவர அபாயம் தோன்றியுள்ளது.

பல மதத்தவர்களாலும் வழிபாட்டுக்குரிய இடமாகக் கருதப்படும் புனிதத் தலம் ஒன்றில் வழிபாடு நடத்துவது தொடர்பாக இஸ்ரேலியருக்கும் பலஸ்தீனியருக்கும் இடையே ஏற்பட்ட சர்ச்சை கைகலப்பாகி பின்னர் பலத்த மோதலாக வெடித்தது.

இதனையடுத்தே பொலீஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும், அதில் தமது தரப்பில் 4பேர் கொல்லப்பட்டதாகவும் பலஸ்தீனர்கள் கூறியுள்ளனர்.

இரு தரப்பு மோதல்களில் பலஸ்தீன தீவிரவாத அமைப்புக்கள் கலந்து கொள்வதால் நிலைமை மேலும் மோசமடைந்து வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ-8)




சுரேஸ் பிரேமச்சந்திரன்

தமிழ் மக்களை வதைக்கும்
அவசரகாலச் சட்டத்தை இல்லாதொழிக்க
தோடம்பழச் சின்னத்துக்கு வாக்களியுங்கள்

சுயேச்சைக் குழு - 1 X

ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஸ் தலைமை)



த.சித்தியானந்தம்

(789(5))

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்.குடாநாட்டிலிருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 28 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:

| | |
|---|---|
| 512/161113/A | 512/161113/B |
| 512/161113/C | 512/161248/A |
| 512/161253/A | 512/161253/B |
| 512/161253/C | 512/161253/D |
| 512/161273/A | 512/161273/B |
| 512/161273/C | 512/161273/D |
| 512/161274/A | 512/161274/B |
| 512/161319/A | 512/161319/B |
| 512/161319/C | 512/161319/D |
| 512/161319/E | 512/161319/F |
| 512/161319/G | 512/161344/A |
| 512/161344/B | 512/161387/A |
| 512/161401/A | 512/161401/B |
| 512/163150/A | 512/163150/B |
| 512/163150/C | 512/163152/A |
| 512/163152/B | 512/163156/A |
| 512/163178/A | 512/163217/A |
| 512/163218/A | 512/163220/A |
| 512/163220/B | 512/163220/C |
| 512/163230/A | 512/163230/B |
| 512/163231/A | 512/163231/B |
| 512/163250/A | 512/163250/B |
| 512/163260/A | 512/163260/B |
| 512/163260/C | 512/163281/A |
| 512/163281/B | 512/163299/A |
| 512/163299/B | 512/163309/A |
| 512/163318/A | 512/163318/B |
| 512/163324/A | 512/163324/B |
| 512/163325/A | 512/163325/B |
| 512/163346/A | 512/163371/A |
| 512/163400/A | 512/163417/A |
| 512/163420/A | 512/163420/B |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 513/155261/A | 513/155261/B |
| 513/155261/C | 513/155261/D |
| 513/156053/A | 513/158708/A |
| 513/158708/B | 513/158708/C |
| 513/158708/D | 513/158708/E |
| 513/158708/F | 513/160438/A |
| 513/160450/A | 513/160450/B |
| 513/160450/C | 513/160450/D |
| 513/160490/A | 513/160490/B |
| 513/160530/A | 513/160530/B |
| 513/160537/A | 513/160537/B |
| 513/160537/C | 513/160714/A |
| 513/160714/B | 513/161492/A |
| 513/161492/B | 513/161550/A |
| 513/161550/B | 513/161550/C |
| 513/161550/D | 513/161550/E |
| 513/161580/A | 513/161580/B |
| 513/161620/A | 513/161643/A |
| 513/161643/B | 513/161726/A |
| 513/161726/B | 513/161744/A |
| 513/161744/B | 513/161801/A |
| 513/161941/A | 513/161941/B |
| 513/161941/C | 513/161942/A |
| 513/161951/A | 513/161951/B |
| 513/161971/A | 513/168929/A |
| 513/168929/B | 513/152247/A |
| 513/152247/B | 513/155218/A |
| 513/155218/B | 513/158744/A |
| 513/158744/B | 513/160493/A |
| 513/160509/A | 513/161521/A |
| 513/161522/A | 513/161522/B |
| 513/161568/A | 513/161663/A |
| 513/161663/B | 513/161663/C |
| 513/161673/A | 513/161913/A |
| 513/161913/B | 513/161913/C |

### உடுவில்

| | |
|---|---|
| 513/142068/A | 513/142068/B |
| 513/142068/C | 513/143872/A |
| 513/143872/B | 513/144183/A |
| 513/155160/A | 513/155160/B |
| 513/157894/A | 513/157894/B |
| 513/157894/C | 513/158638/A |
| 513/158638/B | 513/158760/A |
| 513/158760/B | 513/160484/A |
| 513/160484/B | 513/160484/C |
| 513/160758/A | 513/160758/B |
| 513/160758/C | 513/160770/A |
| 513/160770/B | 513/160770/C |
| 513/160886/A | 513/160887/A |
| 513/160887/B | 513/160939/A |
| 513/160939/B | 513/160939/C |
| 513/161514/A | 513/161593/A |
| 513/161593/B | 513/161593/C |
| 513/161593/D | 513/161624/A |
| 513/161624/B | 513/161624/C |
| 513/161628/A | 513/161658/A |
| 513/161679/A | 513/161679/B |
| 513/161679/C | 513/161773/A |
| 513/161773/B | 513/161797/A |
| 513/161818/A | 513/161818/B |
| 513/161922/A | 513/161949/A |
| 513/161970/A | 513/161970/B |
| 513/161976/A | 513/161976/B |
| 513/161977/A | 513/163896/A |
| 511/157210/A | 511/157606/A |
| 511/157606/B | 511/157606/C |
| 511/157606/D | 511/157634/A |

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

**அண்ணாமலை வேலாயுதபிள்ளை**

(இளைப்பாறிய ஆசிரியர்)

தோற்றம் 01-09-1916 மறைவு 01-09-2000

01-09-2000 அன்று அமரரான எனது அன்புத் தந்தையாரின் ஈமச் சடங்குகளிலும், இறுதியாத்திரையிலும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், பின்னர் நேரில் வந்தும், தொடர்பு சாதனங்கள் வாயிலாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (01-10-2000) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் முகத்துவாரக் கடற்கரையிலும், அதன் பின்னர் மதியபோசனம் பம்பலப்பிட்டி தொடர்மாடி சமூக நலன்புரி மண்டபத்திலும் நடைபெறும்.

அன்னாரின் ஞாபகார்த்தமாக இன்று தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் விசேட அன்னதான வைபவம் நடைபெறும்.

கலாநிதி அ. வே. மணிவாசகர்

தற்காலிக முகவரி:
*பாடசாலை வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*

(78887)

## குருநாகலில் துப்பாக்கிச் சூடு! ஐவர் காயம்!!

குருநாகலில் ஐ.தே.கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்கு சென்று கொண்டிருந்தவர்கள் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐந்து பேர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் பி.ப.3 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்தவர்கள் குருநாகல் ஆஸ்பத்திரியில், அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-8)

## நீர்கொழும்பில் வீடுகள் தீவைப்பு

நீர்கொழும்பு கட்டானப்பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை ஐ.தே.கவின் ஆதரவாளர்களான அறுவரின் வீடுகள் இனந் தெரியாதவர்களால் தீக்கிரையாக்கப்பட்டன.

இது தொடர்பாக நீர்கொழும்பு பொலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (இ-3)

## முன்பள்ளி மாணவர் விளையாட்டுப் போட்டி

கரவெட்டி ரலன்ற் முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு ரலன்ற் கல்வி நிலைய மைதானத்தில் ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் சி.நவரத்தினம் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைச செயலாளா சிதம்பரப்பிள்ளை பசுபதியும் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை. சத்தியசீலன், சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சி.சிவ நாதன் ஆகியோரும் கலந்து கொள்வர். (க)


* பல் கட்ட வேண்டுமா?
* கிளிப் போட வேண்டுமா?

சிறந்த முறையில் பல்கட்டுதல், கிளிப்போடுதல் ஆகியவை செய்து கொடுக்கப்படுவதுடன், உங்கள் கண்களைப் பரிசோதித்து தரமான கண்ணாடிகளை வழங்குபவர்கள்.
*உங்கள் தேவைக்காய் என்றென்றும் சேவையாற்றும்*

★ எரிக்கணேஷ் ★

T.P - 2486
FAX - 2486
564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
கிளை: 91, K.K.S Road,
*கொக்குவில்.*
(C/13126)





வெளிவந்துவிட்டது!
குகனேந்திரனின்
'நெஞ்செல்லாம் நினைவுதான்'
- உருக்கம் நிறைந்த காதல் காவிய நாவல் -
யாழ்ப்பாணத்தின் வழமையான பாணியிலிருந்து சற்று விலகி நல்ல அழகுநடையில் மனநிறைவைத்தரும் நவீன வடிவமைப்புடனும் அழகிய அட்டைப் படத்துடனும் வெளிவந்திருக்கும் இனிய காதல் கதை, எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுச் கொள்ளலாம்.
விலை: ரூபா 95/-
நிலாமலர் வெளியீடு காங்கேசன்துறை வீதி, கொக்குவில்.
(78900)



வேண்டாம் வேண்டாம்
வேண்டாம்
வேண்டாம்
வன்முறை
வேண்டாம் வேண்டாம்
வேண்டாம்
தேர்தல் வன்முறையைக் கண்காணிப்பதற்கான நிலையம் (தே.வ.க.நி)
ஜனநாயகத்தை காக்க வன்முறைக்கெதிராக வாக்களியுங்கள்

உதயன்

## மழைக்கால இடப்பெயர்வுகள்

மழை பெய்யத் தொடங்கி விட்டது. அதனோடு சேர்ந்து தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்து வலிகாமம் பிரதேசத்தில் முகாம்களில் வாழும் மக்கள் சுகாதாரச் சீர்கேடுகளை அனுபவிக்கும் நிலையும் தோன்றியுள்ளது.

இவர்கள் கோடை காலத்தில் தங்கள் சொந்தப் பூமியையும் சொந்த வீடுகளையும் விட்டு உயிரைப் பாதுகாக்கும் ஒரே நோக்கத்துடன் இடம் பெயர்ந்தவர்கள். போர் செய்யும் இரு தரப்புகளினதும் ஆயுதங்களின் வீச்சுக்குள் இடையில் அகப்பட்டு தங்கள் வாழ்நாளைமுடித்துக்கொள்ள விரும்பாமல் பாதுகாப்புத் தேடி ஓடி வந்தார்கள். சுமார் 70,000 பேர்.

ஆனால் வடக்கு – கிழக்கில் வாழும் தமிழர்களுக்கு இடம் பெயர் வாழ்க்கை – அகதி வாழ்வு – அவர்களின் நியதியாகிவிட்டது. தமிழர்களின் அரசியல் உரிமைகள் கிடைக்கும் வரை போர் தொடரும் என்ற நிலையும் நிறுவப்பட்ட ஒன்றாகிவிட்டது.

ஏனோ தெரியவில்லை, யாழ்ப்பாண மாவட்ட மக்களின் இடம்பெயர்வுகள் மாரி காலத்திலோ அல்லது அதனை அண்டியோ தான் இடம்பெறுகின்றன. அரச படைகளும் சரி, விடுதலைப் புலிகளும் சரி தமக்கு இராணுவ வெற்றிக்கான சந்தர்ப்பம் இருக்கும்போதே தாக்குதல்களை நடத்துவார்கள். அனேகமாக அந்தக் காலங்கள் மழையை அண்டி வந்து மக்களை அல்லற்படுத்துகின்றன.

தென்மராட்சி கிழக்கிலிருந்து மக்கள் நேற்று முன்தினம் தமது வீடுகளைவிட்டு இடம் பெயர்ந்து செல்லவும், மழை வரவும் சரியாக இருந்தது. ஷெல்களுக்கும் குண்டுகளுக்கும் பயந்து மரநிழல்களின் கீழ் வந்து ஒதுங்கியவர்கள் மழைக்கு என்ன பாடுபட்டிருப்பார்கள் என்பதனை எண்ணிப் பாருங்கள். மழைக்கால இடப்பெயர்வு மக்களை மேன்மேலும் துன்பியலில் ஆழ்த்தி விரக்தியுறச் செய்யும்.

தமிழ் மக்கள் தமது சொந்தத் தாயகத்தில் சுயாட்சி அதிகாரத்துடன் வாழ வழி செய்யும் தீர்வு ஒன்றை எந்தச் சிங்களத் தலைமைத்துவமும் தாமாக வழங்கும் என்று எதிர்பார்க்க ஏது எதுவும் தெரியவில்லை. அதனால் பயங்கரவாதத்தை ஒடுக்குவது என்ற பெயரில் கொழும்பு அரசுகள் போரைத் தொடரவே செய்யும் என்று நம்பலாம்.

ஆட்சியில் இருந்த பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம், இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு 2005 ஆண்டு வரை கால அட்டவணை விதித்துள்ளது.

''அரசியல் துறையில் சுயாதீனமான மற்றும் உறுதியான'' என்ற நோக்கத்தை விரித்துக் கூறும் தேர்தல் விஞ்ஞாபனப் பந்தி பின்வருமாறு அமைந்துள்ளது.

''அதன் கருத்தானது 2005 ஆம் ஆண்டாகும் போது இனப் பிரச்சினை முற்றாகத் தீர்க்கப்பட்ட, அரசியல் ரீதியில் உறுதியான அதிகாரப் பகிர்வுடனான, பன்முகப்படுத்தப்பட்ட, திறமையான மற்றும் பயனளிக்கக் கூடிய நிர்வாக முறையாகும்'' — என்று கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதியும் பிரதமரும் தமது பேச்சுக்களில் போர் தொடரும் என்ற கருத்தையே தெரிவித்து வருகிறார்கள்.

இத்தகைய பின்னணியில் போருக்கு இடையில் அகப்படும் பொது மக்களின் நலனைப் பேணுவதற்கு வழி இல்லாமற் போய்விடும் ஆபத்துத் தொடரப் போகிறது.

# பூமியில் அல்ல பரலோகத்திலேயே உங்கள் செல்வத்தை சேமியுங்கள்

**ஞாயிறு நற்பிரசாதகம்**

பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம். மத்தேயு.6: 19.

அன்பானவர்களே! நாம் எல்லோரும் இந்தப் பூமியில் சிறிதுகாலம் வாழ்ந்து, மீண்டும் கடவுளுடைய பரம ராஜ்யத்தை அடைய வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆனால் மனிதர்களாகிய நாமோ சுய சம்பாத்தியங்களுக்கு அடிமைப்பட்டு அபரிமிதமாகச் சொத்துக்களைச் சேர்க்க முனைகிறோம். இதற்காக அடுத்தவருக்குச் சொந்தமான நிலங்களை அபகரிக்கவும் வருந்தி உழைத்து தனக்கென்றும் தன்பிள்ளைகளுக்கென்றும் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கென்றும் சம்பாதிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு விட்டோம்.

குடியிருக்கச் சொந்த நிலமின்றி வீதியிலே அலைகிறது மனுக்குலம். ஆனால் நாம் எமக்கென்று எல்லையிட்டுப் பற்றையும் புதருமாக விஷ ஜந்துக்கள் வாழ்வதற்கு இடம்கொடுத்து விடுகின்றோம் அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது பலவித தின் பண்டங்கள். அவைகளை வாங்கிப் புசிப்பதற்குப் பணமின்றிப் பசியோடும், தாகத்தோடும் அலைகிறது மனுக்குலம்.

எல்லாவற்றையும் எல்லோரும் நீதியுடன் அனுபவிக்கும் காலம் வருமா? உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும். ஆனால் உரிமைக்குரல் எழுப்ப முடியாத நிலை. வீதியிலே அலைகின்ற ஏழைகளுக்குச் சொந்தமான நிலங்களை வசதி படைத்தவர்கள் தேவைக்கு அதிகமாக முடக்கி வைத்திருப்பது பாவம் என்று அறியும் நாள் வருமா?

மனித குலத்தின் நல்வாழ்வுக்காக வழி காட்ட வந்த தெய்வம் வார்த்தையின் வடிவமாக உலகுக்கு அருளிய வார்த்தைகளைக் கேட்போம்.

பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும். திருடரும் கன்னமிட்டுத்திருடுபவார்கள். விண்ணகத்திலே உங்கள் செல்வத்தைச் சேமித்து வையுங்கள். அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதுமில்லை கள்வர்கள் கன்னமிட்டுத் திருடுவதுமில்லை.

மேலும் மத்தேயு 6:24 திருவார்த்தையின் படி எவரும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது, ஒருவரை வெறுத்து மற்றவரைச் சினேகிப்பார். அல்லது ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார்.

ஆம் நாம் கடவுளுக்கும் செல்வத்திற்கும் ஊழியம் செய்ய முடியாது. ஏனெனில் நாம் எல்லோரும் எங்கிருந்து வந்தோம். எங்கே போவதற்கு வாஞ்சிக்கின்றோம் என்பதையும் அறிவோம்.

இந்தக் கூடாரத்தில் நாம் எல்லோரும் பாரம் சுமந்து தவிக்கின்ற மனுக்குலத்தை நோக்கி ''வருத்தப்பட்டுப் பாரம் சுமப்பவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று அன்போடு அழைக்கும் தெய்வம் இயேசு கிறிஸ்து அவரின் இனிய குரலுக்குச் செவி கொடுப்போம். மறுமையில் அவருடைய ராஜ்யத்தில் அவரோடு சேர்ந்து வாழ முயற்சிப்போமாக. ★

சகோதரன்
**க. திருவம்பலம்**

## ஏற்புவலி தடுப்பு மருந்து இல்லை

கோப்பாய், ஒக். 1

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் ஏற்புவலி நோய்க்குரிய தடுப்பு மருந்து இன்மையால் நோயாளிகள் பாதிப்படைந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து இந்த மருந்து வராமையால் கடந்த இரண்டு மாதங்களாக இந்த மருந்துக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இந்த மருந்தைப் பெற வேண்டிய நோயாளர்கள் இங்கிருந்து யாழ். அரசினர் வைத்தியசாலைக்குப் பல சிரமங்கள் மத்தியில் செல்வதனை அவதானிக்க முடிகின்றது.

(இ-72)

## செஞ்சிலுவை சங்கக்கிளை அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஒக் 1

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மற்றுமோர் அலகு சங்கானை மத்திய பகுதியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சங்கானை மத்தி ஸ்ரீபாரதி சனசமூக நிலைய மண்டபத்தில், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வலி.மேற்குபிரிவுத் தலைவர் நா. குகராசா தலைமையில் இந்த அங்குரார்ப்பண நிகழ்வு இடம் பெற்றது. (ஐ-15)

### உதய வாக்கு

தானாகச் சிந்திக்கத் தெரியாத மனிதன் அடிமையாவான். அந்த அடிமை தனக்கு மட்டும் துரோகம் செய்து கொள்வதோடு நின்றுவிடாமல், தன் இனத்தவர்களுக்கும் பெரும் துரோகம் செய்து வருகிறான்.

- இங்கர்சால்

## நாளை

புரட்டாதி 16
திங்கட்கிழமை
திதி: பஞ்சமி
பின் இரவு 1.20 வரை.
நட்சத்திரம்: அனுஷம்
பின் இரவு 3. 17 வரை.
கரிநாள்
சுபநேரம்: 12.02—1.32
ராகுகாலம்: 7.32 — 9.02
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி.)

## பொறுப்பும் கடமையும்

போட்டியைத் தவிர்த்து —

அதனால் தேர்தல் நடத்த வேண்டிய தேவையைத் தவிர்த்து —

தமது பாரம்பரியப் பிரதேசமான வடக்கு — கிழக்கு மாகாணங்களில் தம்மைத் தாமே ஆளும் உரிமையுடன் தலை நிமிர்ந்து வாழ்வதையே தமது ஒரே இலட்சியமாகக் கொண்டு குன்றாத உறுதியுடனும் குலையாத கட்டுக்கோப்புடனும் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒரே அணியில் ஒனறு திரண்டு விட்டார்கள் என்பதை அகில உலக மக்கள் சமுதாயத்திற்கு நிரூபித்திருக்கக்கூடிய சந்தர்ப்பத்தை —

அப்படி நிரூபிப்பதன் மூலம் அந்த இலட்சியத்தை விரைவில் வென்றெடுக்கக்கூடிய அரசியல் — பொருளாதார — ராஜதந்திர — தார்மீக ஆதரவைப் பெற்றிருக்கக் கூடிய சந்தர்ப்பத்தை —

நாம் இழந்து நிற்கின்றோம்! அருமையான ஒரு சந்தர்ப்பத்தை அநியாயமாக இழந்து நிற்கின்றோம்! இழப்பு, சாதாரண இழப்பல்ல; பேரிழப்பு!

தலைவர்களாகத் தம்மைக் காட்டிக் கொள்பவர்களின் சுயநலமும், தம்மையும் தம் கட்சியினரையும் விட மற்ற எல்லோரும் அவர்தம் கட்சியினரும் '' கையாலாகாதவர்கள் '' என்ற வக்கிர எண்ணமும் தமிழ் வாக்காளர்களிடம் எதையாவது சொல்லி எதையாவது கொடுத்து எப்படியாவது நாடாளுமன்றத்துக்குள் நுழைந்து விடலாம் என அவர்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கின்ற அசட்டுத் துணிச்சலும் அதீத நம்பிக்கையுமே இதற்கான அடிப்படைக் காரணம் என்றாலும் —

நடந்ததை எண்ணி நம்பிக்கை இழந்து நலிந்து கொண்டிருப்பதை விட —

நடக்கவேண்டியதைப் பற்றிச் சீராகச் சிந்தித்து செம்மையாக நடைமுறைப்படுத்த வேண்டிய சிறப்புக்கடமை — வாக்காளப் பெருமக்களுக்கு உண்டு!

'பயங்கர வாதி'களை அழித்தொழிப்பதே எமது நோக்கம்! தேர்தல் காரணத்துக்காகப் போர் நிறுத்தம் செய்ய மாட்டோம் எனப் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் சிங்கள மக்களுக்கு உறுதியளித்து வரும் இவ்வேளையில்—

மகாநாயக்கர்களின் ஆலோசனையுடனும் பூரண ஒத்துழைப்புடனுமே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்றும், முன்னர் அரசு சமர்ப்பித்த (அரை குறைத்) தீர்வுத் திட்டத்தில் மேலும் பல உரிமைகளும் அதிகாரங்களும் வெட்டிக் குறைக்கப்பட்ட பின்னரே அது புதிய நாடாளுமன்றத்திற் சமர்ப்பிக்கப் படும் என்றும் புதிய பிரதம மந்திரி தென்னிலங்கை வாக்காளர் மத்தியிற் பிரசாரம் செய்துவரும் இவ்வேளையில்—

பிரதான எதிர்க்கட்சியாகிய ஐ. தே. கட்சி, இனப் பிரச்சினைத் தீர்வு பற்றி உறுதியாகவும் தெளிவாகவும் கூறாமல் மழுப்பி வரும் இவ்வேளையில்—

'வலியுறுத்துவோம், வாதாடுவோம், முயற்சி செய்வோம்' எனப் பொதுவாகக் கூறுவதைத் தவிர, தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பது சம்பந்தமாக வேறு எந்தவித ஆக்க பூர்வமான திட்டங்களையும் வெளியிடாமல் பெரும்பாலான வேட்பாளர்கள் மௌனம் காத்து வரும் இவ்வேளையில்—

தமது பொறுப்பும் கடமையும் பன்மடங்கு அதிகரித்துள்ளது என்பதைத் தமிழ் வாக்காளர்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும!

தகுதியானவர்களைத் தெரிவு செய்வதனாலும், தகுதியற்றவர்களைப் புறக்கணிப்பதனாலும் மட்டுமே தம் கடமையையும் பொறுப்பையும் சரிவர நிறைவேற்றியவர்கள் ஆவார்கள் என்பதையும் அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்!

சிங்கள மக்களுக்குரிய அத்தனை அரசியல், நிர்வாக பொருளாதார, கலாசார உரிமைகளும், இந்நாட்டின் பாரம்பரியக் குடிமக்கள் என்ற வகையில், தமிழ் பேசும் மக்களுக்குமுண்டு என்பதைச் சளைக்காது இடித்துரைத்து அவற்றைச் சட்டரீதியாக உறுதிப்படுத்தும் ஆற்றல் பெற்றவர்கள் — தகுதியானவர்கள்!

எல்லோருக்கும் உரிமை தராவிட்டாலும் பரவாயில்லை; எமது உறவினர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் பதவிகளைக் கொடுத்தாற்போதும் என 'இரகசியம்' பேசித் தம் செல்வத்தையும் செல்வாக்கையும் பெருக்க முயல்பவர்கள் — தகுதியற்றவர்கள்!

அரசின் அந்தரங்க நோக்கத்தையும் பாரபட்சமான நடவடிக்கைகளையும் தயவு தாட்சண்யமின்றி அம்பலப்படுத்தி, சமநீதி கிடைக்க வழிவகுப்பவர்கள்-தகுதியானவர்கள்!

## மணி மண்டபம்

தமிழ் பேசும் மக்கள் என்ற ஒரே காரணத்துக்காக, சந்தேகத்தின் பேரில் அவர்களைக் கைதுசெய்ய, சிறையில் அடைக்க, சித்திரவதை செய்ய, ஒப்புதல் வாக்குமூலத்தைப் பயன்படுத்திக் கடுந்தண்டனை வழங்கக், காரணமான சட்டங்களை ஆதரிப்பவர்கள் — தகுதியற்றவர்கள்!

அத்தகைய சட்டங்களை முழுமூச்சுடன் எதிர்ப்பதுடன் அமையாமல், அவற்றின் கடுமையையும் கொடுமையையும் காட்டுமிராண்டித் தனத்தையும் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரும் ஆற்றல் மிக்கவர் — தகுதியானவர்!

அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்துவிட்டு, அத்தனை பேருமே 'பயங்கரவாதிகள்' எனக் கணக்குக் காட்டப்படுவதை மௌனமாக ஏற்றுக்கொள்பவர்கள் — தகுதியற்றவர்கள்!

உண்மை நிலையை உலகுக்கு அறிவித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பொய்மையையும் புளுகையும் புட்டுக்காட்டும் துணிவும் வேகமும் மிக்கவர்கள் — தகுதியானவர்கள்!


தகுதியானவர்கள் நாடாளுமன்றத்துக்குச் செல்லாவிட்டால் ஏற்படும் நட்டத்தை விட தகுதியற்றவர்கள் அங்கே செல்வதனால் ஏற்படும் ஆபத்து அதிகம் என்பதை உணர்ந்து வாக்காளர்கள் தம் கடமையைச் செய்தல் வேண்டும்!

அதேவேளை தகுதியானவர்கள் யாருமே இல்லை என அவர்கள் கருதினால் —

தமது வாக்கை வேறு எவரும் எவ்விதத்திலும் பயன்படுத்த முடியாதபடி விழிப்புடன் இருந்து செயற்படுவது நல்லது.

— சித்தன்

# நீங்காத நினைவலையில் ஓராண்டு



அமரர் வைத்திய கலாநிதி

## வல்லிபுரம் சிவப்பிரகாசம்

மலர்வு 29 - 09 - 1928 உதிர்வு 12 - 10 - 1999

திதி:- 01 - 10 - 2000

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய்
அனைவரையும் அரவணைத்த தெய்வமே!
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ உங்கள் பிரிவுத்துயர்?

அன்பு மனைவி, மக்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

239, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(சி/13130)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 1

றெயில்வேக் கடவை ஊழியர்களுக்கான கொடுப்பனவு தொடர்பான அவசர கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரீதர் தியேட்டரில் அமைந்துள்ள ஈ. பீ. டி.பி. அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் றெயில்வேக் கடவை ஊழியர்களை சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(க)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 1

யாழ். மாவட்ட தனியார் பார ஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் நலன் புரிச் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மேற்படி சங்கப் பணிமனையில் சங்கத் தலைவர் வீ. குமாரசாமி தலைமையில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் நலன்புரிச்சங்க யாப்பு வெளியிடுதலும் நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறவுள்ளதால் அங்கத்தவர்களைச் சமுகமளிக்குமாறு செயலாளர் கேட்டுள்ளார்.

(க)

## கட்டடங்கள் புனரமைப்பு

சண்டிலிப்பாய், ஒக். 1

பண்ணாகம் நெல்லியானில் உள்ள காளி கோயில் கட்டடங்கள் பண்ணாகம் அம்பாள் கலைமன்ற உறுப்பினர்களால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இக்கோயிலில் நவராத்திரி உற்சவம் கடந்த வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135-30)

# ஓராண்டு நினைவஞ்சலி



## திருமதி முருகேசு மனோன்மணி

மண்ணகம் 19 — 04 — 1934 விண்ணகம் 13 — 10 — 1999

திதி: புரட்டாதி பூர்வ பக்க சதுர்த்தி
01 — 10 — 2000

மண்ணுலகைத் தான் பிரிந்தீர் — எம்
மனவுலகைப் பிரியவில்லை.
மண்ணில் வாழும் வரை — எம்
எண்ணத்தில் வாழ்வீர்!

திக்கம் சித்திவிநாயகர் அருளினால் உன் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆறாப் பிரிவினால் துயருறும்
கணவன், பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

"ஆண்டாவளவு"
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.
(78807)

# ஊர்காவற்றுறைப் பிரதேச சபை வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

ஊர்காவற்றுறைப் பிரதேச சபைச் செயலாளரினால் பின் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்குக் கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரங்கள் 16—10—2000 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் '9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்களிடமும், பொது ஸ்தாபனங்களிடமும் இருந்து கோரப்படுகின்றன. கீழே குறித்த தொகையைச் செலுத்திக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
02. கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்பவர்கள் கணிய அளவுச் சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
03. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை கடிக உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து 'செயலாளர், ஊர்காவற்றுறைப் பிரதேச சபை, ஊர்காவற்றுறை' – க்கு பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு இரண்டாவது பிரதியைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு 17—10—2000 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
04. கேள்விகள் 18—10—2000 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
05. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ சபைக்கு உரிமையுண்டு.
06. மேலதிக விவரங்களை ஊர்காவற்றுறைப் பிரதேச சபை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 01) | ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை வீதி புனரமைத்தல் | 2,700/- | 270/- |
| 02) | ஊர்காவற்றுறையில் 8 (எட்டு) வீட்டுத்திட்ட வேலை | 13,000/- | 1,300/- |
| 03) | ஊர்காவற்றுறை புளியடி வீதி அணைச்சுவர் அமைத்தல் | 750/- | 75/- |

கு. கணேசலிங்கம்
செயலாளர்
ஊர்காவற்றுறைப் பிரதேச சபை.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபை,
ஊர்காவற்றுறை.
29—09—2000
(சி/13140)

# மூன்றாம் ஆண்டு அமரத்துவ நினைவு தினம்



## திருமதி இராசம்மா திருநாவுக்கரசு

(புளியங்கூடல்)

ஜனனம் 1935 - 08 - 12 அஸ்தமனம் 1997 - 10 - 05

திதி நாள்: 01-10-2000

உற்ற துணையை இழந்து பட்டமரமாகி நிற்கும்
எனக்கு—என் பிள்ளைகட்கு அம்மா—நீ—உன்
அன்புக் கரங்களை சூக்கும உடலோடு வந்து
எமதருகிருந்து நல்லாசி கூறுங்கள்!

உமது வியர்வைத் துளியிலே
எம்மைப் பேராளராக்கி
உம்மையே எம்மில் கண்டு
இத் தரணியோர் எம்மை அறியவைத்த
எம் அன்புத்தாய் தனக்கு—உமது
பொற்பாத கமலங்கட்கு
எமது மூன்றாம் ஆண்டு அன்புக் கண்ணீரைத்
தாரை வார்த்து நிற்கின்றோம்!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி!

கணவர், மகன், மருமக்கள்,
பேர்த்திமார்.

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.
(78824)

# வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்புக்கு உறுதியாக திருமலையிலிருந்து 2 தமிழ்ப் பிரதிநிதித்துவம் தேவை

## ஏனைய தமிழ்க் கட்சிகளை போட்டியிலிருந்து வாபஸ்பெறக் கோருகிறார் சம்பந்தன்

கொழும்பு,ஒக்.1

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் நிரந்தர இணைப்பு உறுதியாக்கப்படுவதற்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டம் இரண்டு தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வேண்டும். திருகோணமலை மாவட்டத்தை உள்ளடக்கியே வடக்கு-கிழக்கு மாகாண நிரந்தர இணைப்புக்கு இது அத்தியாவசியமாகிறது. திருகோணமலை மாவட்டத்திலிருந்து இரண்டு தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யக்கூடிய வாய்ப்பு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே உண்டு. எனவே திருகோணமலையில் உண்மையான பாசம் இருப்பின் தமிழ் வாக்குகளைப் பிரிப்பதற்குத் துணைபோகாது போட்டியிலிருந்து விலகும்படி ஏனைய தமிழ்க் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு தமிழா விடுதலைக் கூட்டணியின செயலாளர்நாயகம் இரா.சம்பந்தன் கூட்டணியின் திருமலைமாவட்டக் கிளைக்கூட்டத்தில் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

கிளைத் தலைவர் செ.ஈழத்துநாதன் கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

சம்பந்தனின் இல்லத்தில் இக்கூட்டம் நடைபெற்றது. சம்பந்தன தொடர்ந்து சொன்னதாவது:-

1947இல் திருகோணமலைத் தொகுதியில் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின வேட்பாளர் வெற்றி பெற்றார். அப்போது காங்கிரஸின் தலைவராக ஜி.ஜி.பொன்னம்பலமும், மூத்த துணைத் தலைவராக தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகமும் இருந்தனர்.

ஒற்றையாட்சி அரசமைப்பு மூலம் தான் நாட்டில தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்று ஜி.ஜி.பொன்னம்பலம் குரல்கொடுத்தார். அதனை எதிர்த்து தந்தை செல்வா சமஷ்டி அரசமைப்பு முறை மூலம் தான் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று 1949 இல் தெரிவித்தார்.

அடிப்படை கொள்கை வேறுபாட்டால் தமிழ்க் காங்கிரஸிலிருந்து வெளியேறி தமிழரசுக் கட்சியைத் தொடங்கினார் செல்வா. அதன் பின்னர் தமிழ்க் காங்கிரஸ் திருகோணமலையில் போட்டியிடவில்லை. திருகோணமலையில் போட்டியிட்டால் அது திருகோணமலையில் தமிழ் மக்களுக்குப் பெரிய பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்பதற்காக வடமாகாணத்தில் மட்டும் போட்டியிடுவதுடன் அன்றைய காங்கிரஸ் தலைமை முன்னெச்சரிக்கையாக நடந்து கொண்டது. இன்றைய காங்கிரஸ் தலைமைக்கு இது விளங்கவில்லை.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடத்தப்படும் இத் தேர்தலில் 5 சதவீத வாக்குகளை ஒவ்வொரு கட்சியும் பெற வேண்டும். அவ்வாறு பெறத் தவறிய கட்சிகளுக்குக் கிடைக்கும் வாக்குகள் நிராகரிக்கப்படும். 1994ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இவ்வாறு நிராகரிக்கப்பட்ட ஏனைய தமிழ்க்கட்சிகள் குழுக்களுக்குக் கிடைத்தவாக்குகளின் எண்ணிக்கை 6,682. ஏனைய கட்சிகளுக்கு இவ் வாக்குகள் கிடைத்திருக்காவிட்டால் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 1994 தேர்தலில் திருமலையில் இரண்டு ஆசனங்கள் கிடைத்திருக்கும். எதிர்வரும் தேர்தலிலும் தமிழர் விடுதலைக கூட்டணியைத் தவிர வேறு தமிழ்க் கட்சிகள் மற்றும் தமிழ்ச் சுயேச்சைக் குழுக்கள் 5 சதவீத வாக்குகளைப் பெறப் போவதில்லை. அக்கட்சிகளுக்குப் போடப்படும் வாக்குகள் குப்பைத் தொட்டிக்குள் பொய்விழும். இதனை திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். குறைந்த பட்சம் 5 சதவீத வாக்குகளைப் பெறமுடியாத தமிழ்க் குழுக்கள் மற்றும் கட்சிகளுக்கு அளிக்கும் வாக்குகள் திருகோணமலை மாவட்டத்திலிருந்து இரண்டு தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத தெரிவுசெய்யும வாய்ப்பை இழப்பதற்குத்தான் உதவும்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களிப்பதன்மூலம் இரண்டு நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத்




திருமலை மாவட்டத்தில் இருந்து தெரிவுசெய்ய முடியும். தமிழா விடுதலைக் கூட்டணி காற்றில் பறக்கும் சருகுகள்அல்ல. மழைபெய்யும் போது முளைக்கும் உதிரிப் பூர்கள் அல்ல. தந்தை செல்வாவினால் உறுதியான, உரமான, திறமான, கௌரவக் கொள்கைகளின் அடிப்படையில ஆரம்பிக்கப்பட்ட கட்சி.

தமிழர்கள தனித்தேசிய இனம். வடக்கு கிழக்குத் தமிழ் மக்களின் சரித்திர ரீதியான தாயகம். தமிழ் மக்கள் தங்கள் அரசியல் அந்தஸ்தைத் தீர்மானிக்கும் சுயநிர்ணய உரிமை பெற்றவர்கள். தமிழ் மக்களின் அனைத்து ஜனநாயக உரிமைகளும் அங்கீகரிக்கப்பட வேண்டும். இக்கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது தமிழரசுக் கட்சி. இதனை முன்னெடுத்துச் செல்கிறது தமிழர் விடுதலைக் கூட்டணி. இந்தப பாதையில் நாம் நீண்ட பயணம் செய்துள்ளோம். 1957இல் பண்டா-செல்வா ஒப்பந்தம், 1965இல் டட்லி-செல்வா ஒப்பந்தம், 1987இல் இலங்கை-இந்திய ஒப்பந்தம் இவையெல்லாம் வடக்கு-கிழக்கு தமிழர்களின் வரலாற்று ரீதியான பாரம்பரிய தாயகம் என்ற உறுதியான கட்டமைப்பை ஏற்படுத்தியவை. எமது நீண்ட பயணத்தின் மைல் கற்களாக விளங்கும் இவற்றிலிருந்து தற்போது தீர்வுகாணும் முயற்சிகள் வெகுதூரம் முன்னேறிச் சென்றுள்ளன. தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு நிலையான நிலைப்பாட்டுடன் செயலாற்றி வருகின்றது.

முதலில யுத்தநிறுத்தம் கொண்டுவரப்பட வேண்டும். அந்த யுத்த நிறுத்தம் சர்வதேச அவதானிகளால் கண்காணிக்கப் படவேண்டும். மூன்றாம் தரப்புச் சர்வதேச மத்தியஸ்தத்துடன் அரசுக்கும் விடுதலைப புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வு காணப்பட வேண்டும் என்பதே கூட்டணியின தெளிவான நிலைப்பாடு.

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை நடைபெறும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. யுத்தத்தின் மூலம் சமாதானத்தை அடையப் போகிறோம் என்றும், யுத்தம் விடுதலைப் புலிகளுக்கு எதிரானது, தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல என்றும் அரசு கூறிவருவதைக் கூட்டணி நிராகரித்துவிட்டது. இதனை அரசுக்குத் தெரிவித்து விட்டோம்.

யுத்தத்தின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என்பதையும் அரசுக்குக் கூறியுள்ளோம். விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திக காணப்படும் தீர்வே நிரந்தரமானது என்பதை நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் சர்வதேச ரீதியிலும் கூட்டணி வலியுறுத்தி வந்துள்ளது. நியாயம் படைத்தவர்கள் உறுதியான கொள்கையுடையவர்கள். அர்த்தமற்ற தீர்வை ஏற்கமாட்டார்கள் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சர்வதேச சமூகம் அடையாளம் கண்டுள்ளது. தீர்வுகாணும் முயற்சியில் எவரெவருடன் பேச வேண்டுமோ அவர்களோடு எல்லாம் பேசி ஆணித்தரமாகச் செயற்பட்டு வருகிறது தமிழர் விடுதலைக் கூட்டணி. இப்படி அவர் கூறினார்.(இ-4)

## சிஹல உறுமய ஆட்சியைக் கைப்பற்றினால் மாங்குளம் வரை சிங்களக் கிராமங்கள்!

கொழும்பு,ஒக்.1

நாம் பதவிக்கு வந்தால் இலங்கையின் தலைநகரை கொழும்பில் இருந்து அநுராதபுரத்துக்கு கொண்டு செல்வோம். அநுராதபுரத்தில் இருந்து மாங்குளம் வரை சிங்களக் கிராமங்களை ஏற்படுத்துவோம்.

நீர்கொழும்பில் சமீபத்தில் நடைபெற்ற சிஹல உறுமயவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய அதன் பிரதி அமைப்பாளர் சம்பிகுரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்:-

78 சதவீதம் பெரும்பான்மை சிங்களவர்களைக் கொண்ட இந்த நாட்டில் 30 சதவீதமான சிங்களவர்களோ பொருளாதார வசதிகளைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். நாம் ஆட்சிக்கு வந்தால் இவற்றை மாற்றி அமைப்போம். எந்தப் பேய்க்கும் பயப்படமாட்டோம் எனக் கூறும் ஜனாதிபதி சந்திரிகா, அஷ்ரப்புக்குப் பயப்பட்டார். ஐ.தே.க. புலிகளுக்கு ஆயுதங்களைக் கொடுத்தது. பொ.ஐ.மு. யுத்தத்தை நிறுத்திப் பேச்சுவார்த்தை நடத்தியதன் மூலம் ஆயுதங்களைக் கப்பல்களில் கொண்டு வர புலிகளுக்கு வழியமைத்தது.

ஐ.தே.க. பதவிக்கு வந்தால் புலிகளின் கட்டுப்பாட்டிலே இயங்குவார்கள். நாம் பதவிக்கு வந்தால் சிறுபான்மையினர் கஷ்டமின்றி வாழ சம உரிமை வழங்குவோம். ஐந்து வருடத்தில் யுத்தத்தினால் சுமார் 13 ஆயிரம் பேர் மரணமடைந்தார்கள். 35 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்ததுடன் ஏழாயிரம் பேர் அங்கவீனமுற்றனர் - என்றார். (இ-4)

## வன்னியில் இடம்பெயர்ந்தோரில் 10ஆயிரம் பேர் வாக்களிக்கும் வாய்ப்பை இழப்பர்!

கொழும்பு,ஒக்.1

வன்னித் தேர்தல் தொகுதியில் இருந்து இடம்பெயர்ந்தோரில் சுமார் 10 ஆயிரம் பேர்வரை வாக்களிக்கும் வாய்ப்பை இழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

வன்னியில் பல்வேறு தேர்தல் தொகுதிகளிலிருந்து கடந்த கால அசம்பாவிதங்களில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் இடம்பெயர்ந்து அநுராதபுரம், புத்தளம், குருநாகல் மற்றும் மதவாச்சிப் பகுதிகளில் தங்கியுள்ளனர்.

இந்தத் தேர்தலில் வாக்களிக்க ஏற்பாடுகளைச் செய்து தருமாறு இவர்கள் கோரியிருந்தபோதும் இவர்கள் குறித்த முழு விவரங்களையும் பரிசீலனை செய்த வவுனியா மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகம் சுமார் 20 ஆயிரத்து 400 பேருக்கே இதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளது. மிகுதி 9 ஆயிரத்து 600 பேரதும் விண்ணப்பங்கள் பல்வேறு காரணங்களுக்காகவும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

வாக்களிக்க வாய்ப்புக் கிடைத்தோரில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 15 ஆயிரத்து 600 பேரும் முல்லைத்தீவைச் சேர்ந்த 3 ஆயிரம் பேரும் வவுனியாவைச் சேர்ந்த ஆயிரத்து 800 பேரும் அடங்குவர்.

இவர்களுக்கு விசேட வாக்காளர் அட்டையும் விநியோகிக்கப்படவுள்ளன. இந்த வாக்காளர் அட்டைகளைச் சம்பந்தப்பட்டவர்கள் தற்போது வசிக்கும் பகுதிகளுக்கு அனுப்பிவைக்குமாறும் தேர்தல் ஆணையாளர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இவர்கள் வாக்களிக்கச் செல்லும் போது இந்த விசேட வாக்காளர் அட்டையைக் கட்டாயம் எடுத்துச் செல்ல வேண்டும். இல்லையேல் வாக்களிக்க அனுமதி வழங்கப்படாது என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (இ-4)

## மனிதப் படுகொலை செய்த பொலீஸ்அதிகாரி இன்று ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்

### ஜனாதிபதி குற்றம் சாட்டுகிறார்

கொழும்பு,ஒக்.1

ஜூலைக் கலவரத்தின்போது மனிதப்படுகொலை செய்த பொலீஸ் அதிகாரி ஒருவரும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சி சார்பில் வேட்பாளராகப் போட்டியிட உள்ளார். இளைஞர்களை டயர்களில் போட்டு எரித்த பொலீஸார் சுதந்திரமாக நடமாடித் திரிகின்றனர். ஆனால் நாம் ஜூலைக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நஷ்டஈடு வழங்கியுள்ளோம்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற, முன்னைய அரசின் காலத்தில் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு காணி உறுதிகள் வழங்கும் வைபவத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் - கடந்த காலங்களில் ஐ.தே.கட்சி அரசாங்கம் பழிவாங்கிய அரச ஊழியர்கள் அனைவருக்கும் எமது அரசு நஷ்டஈடுகளை வழங்கியுள்ளது.

முழு நாட்டையும் சிங்கள அரசர்கள் ஆட்சி செய்த காலத்தில் கூட, ஐ.தே.க. அரசாங்கம் பதவியில் இருந்தபோது இடம்பெற்ற படுகொலைகள் போல் எதுவும் நடைபெறவில்லை.

இப்படி அவர் கூறினார். (இ-8)

### தமிழர்களும் இந்த நாட்டு பிரசைகளே!

கொழும்பு,ஒக.1

வடக்கில் வாழும் தமிழர்களும் இந்நாட்டின் பிரசைகளே. அவர்களுக்கு உரிய உரிமைகளை நாம் கொடுத்தே ஆகவேண்டும். இதனை அடிப்படையாகக் கொண்டுதான் பிரபாகரன் யுத்தம் செய்கிறார். ஆனால் அவர் மேற்கொள்ளும் எல்லா நடவடிக்கைகளையும் நாம் ஆதரிக்கமாட்டோம்.

இவ்வாறு கொழும்பில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய புதிய இடதுசாரி முன்னணியின் வேட்பாளர் விக்கிரமபாகு கருணரத்தின தெரிவித்தார்.

(இ-8-186)

## தமிழ்மக்களின் அவலநிலை நீங்க ஆட்சி மாற்றம் அவசியமானது

### யாழ்.மாவட்ட ஐ.தே.க. முதன்மை வேட்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஒக்.1

தமிழ் மக்களின் இன்றைய அவல நிலை நீங்க வேண்டுமானால் உடனடியாக அரசியல் மாற்றம் ஒன்று அவசியம் ஆகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ் மாவட்ட முதன்மை வேட்பாளர் தியாகராஜா மகேஸ்வரன் யாழ்.நகரில் தனது கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்களின் அவலங்களைப் பின்னணியாகக் கொண்டு தமிழ் மக்களைப்பகடைக் காய்களாக உருட்டி அரசியல் நடத்துவோரை அம்பலமாக்க வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டு மக்கள் பல தேர்தல்களைச சந்தித்திருந்த போதிலும் ஒக்ரோபர் 10இல் வரும் தேர்தல தமிழ்மக்களைப் பொறுத்தவரை முக்கியமான தேர்தல் ஆகும்.

ஒக்ரோபர் 10 நாட்டில் புதியதோர் திருப்புமுனையை ஏற்படுத்தும நாள். அமைதியை வேண்டி வாக்குகளை வீசிய மக்கள் இன்று அமைதி இழந்து அல்லோல கல்லோலப்பட்டு அகதி வாழ்க்கையே கதியாகிவிட்ட நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர்.

யாழ்.குடாநாட்டு மக்களிடையே கட்டி எழுப்பப்பட்ட சுபீட்சமான பொருளாதார வாழ்க்கை முறை சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது. சமூக உறவுகள் சிதைந்துவிட்டன.

ஒன்றிணைந்த சமூகத்தின் கட்டமைப்பு சீர் குலைந்து நாற்றிசையிலும் சிதறுப்பட்ட நமது சமூகத்தை ஒன்றிணைக்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

கையேந்தி நிற்கும் எம் மக்களுக்கு பிச்சை போடுவது போல அங்கொன்றும் இங்கொன்றுமாக அரச பணத்தை தம் பணம் போல அளவின்றி செலவு செய்கின்றனர். இப் பணம் யாழ்.மாவட்ட அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டதே தவிர தனிப்பட்ட கட்சியின் செயற்பாடுகளுக்காகவோ, கட்சியின்பிரசாரத்துக்காகவோ ஒதுக்கப்படவில்லை. என்பதை மக்கள் தெரிந்துகொள்வர் என எண்ணுகின்றேன்.

ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்தில் மக்களுக்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது அரசியல் கட்சிகள் ஏனோதானோ என எண்ணி இருந்த வேளையில் தனித்து ஒருவனாக நின்று மக்களின் அன்றாட தேவைகளுக்கான பொருள்களைத் தருவித்துக் கொடுக்க முடிந்ததையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

பெரும கஷ்டத்தின மத்தியில் மொனறா விமான சேவைமூலம் எமது மக்களுக்கு வசதியான பட்ணத்தை ஏற்படுத்திக கொடுக்க முடிந்தது. அது மட்டுமன்றி தற்போது கடற்பயணத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் சிற்றி ஒவ் றிங்கோ கப்பலை சேவைக்கு அமர்த்துவதற்கு பல எதிர்ப்புக்களின் மத்தியில் உதவிய பெருமையும் எமக்கு உண்டு.

எமது மக்களுக்காக நாம் வெற்றிகரமாக எடுத்த முயற்சிகளுக்கு இன்று யாழ்.மாவட்டத்தில் பெருமை பேசிவரும் கட்சி போட்ட முட்டுக்கட்டைகள் பயன் தரவில்லை.

அங்கே அவசரகாலச் சட்டத்துக்கு கை உயர்த்துகிறார்கள். இங்கே காலைவாரி விடுகிறார். எமது கட்சி அப்படியானது அல்ல. இன்று எம்மக்கள் வேண்டுவது சமாதானம். போரற்ற ஒரு சூழலில் அன்றாடம் செத்துமடியும் இளசுகளுக்கு விலை கொடுப்பவா யார்: உடனடியாக நாம் செய்ய வேண்டியவை பல உண்டு.

அரசியல் மாற்றம் ஒன்று எமக்கு அவசியமாகும். இம்மாற்றத்தை ஏற்படுத்த ஐ.தே.கட்சியை ஆட்சிக்கு அமர்த்துவதன் மூலமே முடியும்.

இப்படி அவர் கூறினார்.(இ-7-ரி)

# நல்லூர் பிரதேச சபை

## ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

### பொறுப்பேற்ற பின்

## மிலேனியம் வரை நடைபெற்ற செயற்றிட்டங்களின் விவரம் - 2000



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் கடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது மக்களால் தெரிவுசெய்யப்பட்டு, உள்ளூராட்சி சபைகளைப் பொறுப்பேற்று அதனூடாக மக்களின் தேவைகளை இனங்கண்டு அதனடிப்படையில் சேவைகளைச் செய்து வருகின்றோம். எமது கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமாகிய கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களின் நேரடி வழிகாட்டல் மூலமும் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய திரு.வீ.கே.ஜெகன் அவர்களின் இடைவிடா முயற்சியாலும் எமது சபையின் உப தலைவர். உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், அரசாங்க அதிபர், உள்ளூராட்சி ஆணையாளர், உதவி உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பிரதேச செயலர், நல்லூர் ஆகியோரது ஒத்துழைப்போடும் எமது பிரதேச மக்களின் இதயபூர்வமான ஆதரவோடும் நாம் இதுவரை எமது சபை மூலம் மேற்கொண்ட அபிவிருத்தி, புனரமைப்பு செயற்றிட்டங்களை இப்பத்திரிகை வாயிலாகச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இம்மக்களின் சேவையில் எமது முன்னாள் உபதலைவர் திரு. தி.ராஜ்குமார் (தோழர் ரகு) உறுப்பினர் பியசேன கருணாரத்தின (தோழர் ரஞ்சன்) ஆகியோர் புலிகளின் இரத்தப் பசிக்கு இரையாகினர். அவர்களின் மக்கள் சேவை என்றும் எம் மக்களின் மனதை விட்டகலா. 'தேசத்திற்காக தியாகங்களை ஏற்போம், என்றும் நாம் மக்களின் சேவகர்கள்'.

என்றும் மக்களின் சேவைக்குரிய,

**திரு.துரை தவராஜா** ஜே.பி.
உப தலைவர்,
நல்லூர் பிரதேசசபை.

**திரு.கனகரத்தினம் மணிபல்லவராஜன்** ஜே.பி.யூ.எம்.
தலைவர், நல்லூர் பிரதேசசபை.

## நல்லூர் பிரதேசசபை

### 1998 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மொத்த வேலைத் திட்ட விவரங்கள்

| | |
|---|---|
| 1. சபை நிதி | 2,280,000.00 |
| 2. பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை | 378,000.00 |
| 3. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி | 170,000.00 |
| 4. றான் நிதி | 1,000,000.00 |
| 5. விசேட மூலதன நிதி | 1,500,000.00 |

### 1999 ஆம் ஆண்டு செய்யப்பட்ட வேலை விவரங்கள்

* சபை நிதி

| | |
|---|---|
| 01. சைவப் பாடசாலை வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை, திருநெல்வேலி | 135,000.00 |
| 02. முருகன் வீதி, கல்லிட்டுத் தாரிடல் வேலை, திருநெல்வேலி | 150,000.00 |
| 03. கேணியடி வீதி, கல்லிட்டுத் தாரிடல் வேலை, கொக்குவில் | 175,000.00 |
| 04. கொக்குவில் சுடலை வீதி, கல்லிட்டுத் தாரிடல் வேலை, கொக்குவில் | 175,000.00 |
| 05. கோணாவளை தொடர் வீதி, கல்லிட்டுத் தாரிடல் வேலை, கொக்குவில் | 30,000.00 |
| 06. பூநவராயர் வீதி, அணைச்சுவர் திருத்தம், திருநெல்வேலி கிழக்கு | 50,000.00 |
| 07. கோண்டாவில் நூல்நிலையமும் வாகீஸ்வரி ச.ச. நிலையமும் திருத்தம், கோண்டாவில் | 250,000.00 |
| 08. திருநெல்வேலிச் சந்தைக் கொட்டகை அமைத்தல், திருநெல்வேலி | 250,000.00 |
| 09. கொக்குவில் உபஅலுவலக நூல்நிலைய திருத்தமும் திண்ணை பூசுதலும் | 240,000.00 |
| 10. ஆலடி வீதி, கல்லிட்டுத் தாரிடல் வேலை, கோண்டாவில் | 100,000.00 |
| 11. கொக்குவில் சுடலை தொடர் வீதி திருத்தம், கொக்குவில் | 165.000.00 |
| 12. அடைக்கலநாயகி வீதி திருத்தம், கொக்குவில் மேற்கு, ஆனைக்கோட்டை | 130,000.00 |
| 13. அம்மன் வீதி திருத்தம், கோண்டாவில் கிழக்கு | 125,000.00 |
| 14. தாய், சேய் பராமரிப்பு நிலையங்களுக்கான போசாக்கு உணவு வழங்கல் | 100,000.00 |
| 15. நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட 5ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்களுக்கான நன்கொடை | 39,000.00 |

* பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை

| | |
|---|---|
| 01. மழை நீர் வடிகாலமைத்தல் வேலை (ஆனைக்கோட்டை) | 200,000.00 |
| 02. வண்ணார்பண்ணை வடமேற்கு பாடசாலை வீதி திருத்தம் | 100,000.00 |
| 03. வராகியம்மன் வீதி திருத்தம், கொக்குவில் மேற்கு ஆனைக்கோட்டை | 100,000.00 |

* பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி

| | |
|---|---|
| 01. செம்பாடு குழாய்க் கிணறு அமைத்தல், கோண்டாவில் கிழக்கு | 25,000.00 |
| 02. சிவகாமி அம்மன் வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை, கோண்டாவில் மேற்கு | 100,000.00 |

* புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை, வடக்கு-கிழக்கு (றான்) நிதி

| | |
|---|---|
| 01. சுகாதாரத் தொழிலாளர் விடுதி அமைத்தல்,திருநெல்வேலி | 750,000.00 |
| 02. நந்தாவில் கிணறு திருத்தம், கோண்டாவில் | 25,000.00 |
| 03. கட்டையால் மயானக்கிணறு திருத்தம், கோண்டாவில் | 35,000.00 |
| 04. கொக்குவில் உப அலுவலகக் கிணறு திருத்தம் | 30,000.00 |
| 05. சிந்துப்பாத்தி மயானக்கிணறு திருத்தம், அரியாலை | 30,000.00 |
| 06. கொக்குவில் இந்து மயானக்கிணறு திருத்தம் | 20,000.00 |
| 07. திருநெல்வேலி இந்து மயானக்கிணறு - திருநெல்வேலி | 20,000.00 |
| 08. காரைக்கால் இந்து மயானக் குழாய்க் கிணறு அமைத்தல், கோண்டாவில் மேற்கு | 25,000.00 |

* வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலம் செய்யப்பட்ட வேலைகள்

| | |
|---|---|
| 01. ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி | 1,000,000.00 |
| 02. மானிப்பாய் சிறுவில் அன்னங்கை வீதி | 775,000.00 |
| 03. பிள்ளையார் வீதி, திருநெல்வேலி | 172,950.00 |
| 04. ஆடியபாதம் கொக்குவில் வீதி, கொக்குவில் | 667,840.00 |
| 05. அரசடிப் பிள்ளையார் வீதி,கோண்டாவில் | 320,050.00 |
| 06. கலாசாலை வீதி திருநெல்வேலி | 243,550.00 |
| 07. இராமலிங்கம் வீதி திருநெல்வேலி | 80,000.00 |
| 08. சம்பியன் வீதி கொக்குவில் | 755,000.00 |
| 09. நந்தாவில் வீதி கொக்குவில் | 436,000.00 |

* விசேட மூலதன நிதி 1.5 மில்லியன்

| | |
|---|---|
| 01. தென்னங்கன்று விநியோகம் | 140,000.00 |
| 02. மரமுந்திரிகைக் கன்று விநியோகம் | 100,000.00 |
| 03. ஞான வைரவர் ச.ச. நிலையம் திருத்தம் - திருநெல்வேலி கிழக்கு | 25,000.00 |
| 04. காரைக்கால் இந்து மயானமடம் திருத்தம் - கோண்டாவில் மேற்கு | 50,000.00 |
| 05. கலைவாணி ச.ச. நிலையம் திருத்தம் - பூநாறி மரவீதி, கொக்குவில் மேற்கு | 20,000.00 |
| 06. பாரதி ச.ச. நிலையம் திருத்தம் - திருநெல்வேலி | 20,000.00 |
| 07. இந்து இளைஞர் மன்றமும் ச.ச. நிலையமும் திருத்தம் - கோண்டாவில் கிழக்கு | 25,000.00 |
| 08. காந்திஜி ச.ச. நிலையம் திருத்தம் - கொக்குவில் மேற்கு | 20,000.00 |
| 09. கட்டையால் மயான புனரமைப்பு - கோண்டாவில் | 100,000.00 |
| 10. கொட்டைக்காடு மயான புனரமைப்பு - கோண்டாவில் | 50,000.00 |
| 11. கொக்குவில் இந்து மயானப் புனரமைப்பு - கொக்குவில் | 100,000.00 |
| 12. ஞானவைரவர் சனசமூக நிலையம் புனரமைப்பு - கோண்டாவில் | 50,000.00 |
| 13. கலாமன்ற சனசமூக நிலைய புனரமைப்பு - திருநெல்வேலி | 50,000.00 |
| 14. விவேகானந்தா சனசமூக நிலையப் புனரமைப்பு - கோண்டாவில் | 20,000.00 |
| 15. வாழையம்மன் ச.ச. நிலைய தளபாடம் - திருநெல்வேலி கிழக்கு | 25,000.00 |
| 16. நல்லூர் வடக்கு ச.ச.நிலைய தளபாடம் - நல்லூர் வடக்கு | 75,000.00 |
| 17. கொக்குவில் ச.ச. நிலைய புனரமைப்பு - பிரம்படி கொக்குவில் கிழக்கு | 150,000.00 |
| 18. நேதாஜி ச.ச. நிலைய தளபாடம் - கொக்குவில் கிழக்கு | 20,000.00 |
| 19. உதயசூரியன் சனசமூக நிலைய தளபாடம் - கோண்டாவில் மேற்கு | 50,000.00 |
| 20. இந்து வாலிபர் சங்கக் கட்டடத் திருத்தம் - திருநெல்வேலி | 145,000.00 |
| 21. ஞானஒளி ச.ச. நிலைய கட்டடம் அமைத்தல் - கோண்டாவில் | 25,000.00 |
| 22. அலுவலகத்துக்கு தளபாட உபகரணக் கொள்வனவு - நல்லூர் பிரதேசசபை | 200,000.00 |
| 23. கலைமகள் ச.ச. நிலையத் திருத்தம் - கேணியடி, கொக்குவில் மேற்கு | 20,000.00 |
| 24. இலங்கை நாயகி ச.ச. நிலைய திருத்தம் - நல்லூர் வடக்கு | 20,000.00 |

* விசேட மூலதன நிதி 1.1 மில்லியன்

| | |
|---|---|
| 01. ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத் திருத்தம் - கோண்டாவில் கிழக்கு | 100,000.00 |
| 02. அமரகவி சனசமூக நிலைய வாசிப்பு மண்டபம் - கோண்டாவில் மேற்கு | 50,000.00 |
| 03. மத்திய சனசமூக நிலையத் திருத்தம் - கோண்டாவில் வடக்கு | 50,000.00 |
| 04. பகுத்தறிவக சனசமூக நிலையத் திருத்தம் - திருநெல்வேலி | 50,000.00 |
| 05. கொக்குவில் சனசமூக நிலைய புனரமைப்பு 2ஆம் கட்டம் - பிரம்படி கொக்குவில் | 100,000.00 |
| 06. சனசமூக நிலையங்களுக்கான தளபாடம் வழங்கல் | 100,000.00 |
| 07. சனசமூக நிலையங்களுக்கான பத்திரிகை விநியோகம் | 200,000.00 |
| 08. சனசமூக நிலையங்களுக்கான புத்தகம் வழங்கல் | 200,000.00 |
| 09. பொது நூலகங்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல் | 200,000.00 |
| 10. சனசமூக நிலையங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கல் | 50,000.00 |

### 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற, நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைத் திட்டங்கள்

* சபை நிதி

| | |
|---|---|
| 01. பழம் கிணற்றுப் பிள்ளையார் வீதி, கல்லிட்டுத் தாரிடல் - திருநெல்வேலி | 250,000.00 |
| 02. ஸ்ரீநாராயணா வீதி. கல்லிட்டுத் தாரிடல் - கோண்டாவில் | 225,000.00 |
| 03. மிசன் (விவேகானந்தா ச.ச.நி.) வீதி, கல்லிட்டுத் தாரிடல் - கோண்டாவில் | 200,000.00 |
| 04. சுகாதாரத் தொழிலாளர் விடுதி அமைத்தல் வேலை, திருநெல்வேலி | 750,000.00 |
| 05. நவீன சந்தை திருத்தம் - திருநெல்வேலி | 1,500,000.00 |
| 06. திருநெல்வேலி சந்தை மீன் மேசையும் இருக்கையும் அமைத்தல் | 19,000.00 |
| 07. கொக்குவில் சந்தை மீன் மேசையும் இருக்கையும் அமைத்தல் | 42,000.00 |
| 08. கொக்குவில் இந்து மயானத் திருத்தம் - கொக்குவில் கிழக்கு | 68,118.75 |
| 09. கொக்குவில் உப அலுவலகத் திருத்தமும் பராமரிப்பும் | 230,000.00 |
| 10. காளிகோவில் வீதி, கல்லிட்டுத்தாரிடல் - கொக்குவில் கிழக்கு | 350,000.00 |
| 11. கொக்குவில் உப அலுவலக தட்டை சீலிங் வேலை | 20,000.00 |
| 12. தாய், சேய் பராமரிப்பு நிலையங்களுக்கான போசாக்கு உணவு வழங்கல் | 125,000.00 |

(10ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்ப் பேசும் மக்களுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் எம். சிவசிதம்பரம் விடுக்கும் செய்தி



**அன்பார்ந்த தமிழ்ப்பெருங்குடி மக்களே!**

நீண்ட இடைவெளிக்குப்பின் சில கருத்துக்களை உங்கள் மத்தியில் கூறக்கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தையிட்டு நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். சில மாதங்களுக்கு முன்பு நான் கடுமையான சுகயீனமாக இருந்தபோதும் விரைவிலே மீண்டும் வந்து உங்களைச் சந்திக்க சந்தர்ப்பம் வரும் என்று எதிர்பார்த்திருந்தேன். ஆனால் அந்தச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எனவேதான் நான் இந்த வழியைப் பின்பற்றி உங்களோடு சில கருத்துக்களை பரிமாற விரும்புகின்றேன். அப்படிப் பரிமாறுகின்ற சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்ததையிட்டு நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். நேரில் வந்து உங்களோடு பேசி கருத்துக் களைப் பரிமாற முடியாமற் போனதற்காக நான் வருந்துகின்றேன். அதற்காக என்னை மன்னிக்குமாறு உங்களை மிகவும் பணிவன்பாக வேண்டுகின்றேன்.

பல மாதங்களுக்கு முன்பு நான் சுகமில்லாமற் போன கால கட்டத்திலே கட்சியினுடைய நடவடிக்கைகளை முற்று முழுதாக தானே சுமந்து செயல்பட்டார் நண்பர் ஆனந்தசங்கரியவர்கள். அவர் மிகவும் திறமையாக கட்சியினுடைய செயல்கள், செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தார் என்பது உங்களுக்குத் தெரியும். அதற்காக நான் அவருக்கு எனது நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டவனாக இருக்கின்றேன். எனக்கு வைத்தியம் செய்கின்ற சிலர் விரைவிலே நான் மீண்டும் இலங்கைக்குச் சென்று அரசியலில் ஈடுபடும் சூழ்நிலை வரும் என்று கூறுகின்றார்கள். நானும் அதை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றேன். விரைவிலே நான் மீண்டும் இலங்கைக்கு வந்து கூட்டணியினுடைய செயற் பாடுகளில் பங்கு பற்ற எண்ணியுள்ளேன் என்பதை மிகவும் பணிவன்புடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அன்பர்களே! அன்று தொட்டு இன்று வரையும் மாநில சுயாட்சியின் அடிப்படையில் தமிழ் மக்கள் சமஉரிமை பெற்று இலங்கையிலே வாழவேண்டுமென்ற எண்ணத்திலே ஓர் அரசியல் தீர்வை காண்பதற்காக நமது கூட்டணித் தலைவர்கள் அன்றும் இன்றும் பாடுபட்டு வந்திருக்கின்றார்கள். அந்த அரசியல் தீர்விலே நான்கு முக்கியமான விஷயங்கள் அடங்கியிருக்க வேண்டுமென்று நாம் எண்ணினோம் : அதற்காகப் பாடுபட்டு வந்தோம்.

1. இன்றைக்கு இருக்கின்ற ஒற்றையாட்சி முறை முற்றாக அகற்றப்பட வேண்டும்.
2. வடக்கு கிழக்கு மாகாணம் இணைந்த ஒரு மாநிலம் உருவாக்கப்பட வேண்டும்.
3. அந்த மாநிலத்திற்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட அந்தச் சபைக்கு சட்டம், ஒழுங்கு பொலீஸ் அதிகாரம் இருகக வேண்டும்.
4. வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள அத்தனை காணிகளும் அந்தச் சபையின் அதிகாரத்திலே இருக்க வேண்டும். சபைதான் யாருக்கு அதைக் கொடுக்கவேண்டும், எப்படிக் கொடுக்கவேண்டும் என்பதை தீர்மானிக்கவேண்டும் - என்று நாம் வலியுறுத்தி வந்தோம்.

இந்த நான்கு முக்கியமான கொள்கைகளை அடிப்படையாக வைத்துத்தான் ஒரு மாநில சுயாட்சியின் அடிப்படையில் இந்த அரசியல் தீர்வைக் கான வேண்டும் என்பதற்காக எமது தலைவர்கள் அன்றும் இன்றும் பாடுபட்டு வந்தார்கள். நமது கட்சி பல இழப்புக்களையும் தோல்விகளையும் கண்டுவிட்டது. என்றாலும் கூட நமது தலைவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மனம் தளராமல் தொடர்ந்து நமது மக்கள் சமஉரிமை பெற்ற மக்களாக இலங்கையில் வாழவேண்டுமென்பதற்காக தங்களால் இயன்ற முயற்சி எல்லாம் எடுத்தார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு மீண்டும் உங்களைக் கேட்கிறோம். எங்களால் நாடாளுமன்றத்துக்கு உள்ளே இருந்தாலும் சரி வெளியே இருந்தாலும் சரி தமிழ்மக்கள், தமிழ்ப் பேசும் மக்கள் இந்த நாட்டில் சம உரிமை பெற்று வாழ வேண்டும் என்பதை நிலைநாட்ட எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள் என்று மிகவும் பணிவன்பாக வேண்டுகின்றோம். நான் இல்லாவிட்டாலும் கூட நண்பர் ஆனந்த சங்கரி, சம்பந்தர், மாவை சேனாதிராசா போன்றவர்கள் கட்டாயமாக நாங்கள் கொண்ட கொள்கையிலிருந்து ஓர் இம்மியளவும் விட்டுக் கொடாமல் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எனவே, அந்த அடிப்படையில் உங்களுடைய வாக்குகளை - அருமையான வாக்குகளை - கூட்டணிக்கும் கூட்டணி வேட்பாளர்களுக்கும் எல்லா மாவட்டங்களிலேயும் நீங்கள் கொடுக்க வேண்டும் என்று பணிவன்பாக வேண்டுகின்றேன். நான் நேரிலே சந்தித்து கருத்துப் பரிமாற முடியாமைக்கு மீண்டும் ஒருமுறை வருத்தம் தெரிவிக்கிறேன். ஆனால் விரைவாக நான் வருவேன். நான் வந்து மீண்டும் ஒரு முறை அரசியலிலே ஈடுபட்டு கூட்டணியின் மூலம் எமது மக்களுக்குச் சேவை செய்வதற்கு எப்பொழுதும் தயாராக இருக்கிறேன் என்பதைக் கூறி மீண்டும் ஒரு முறை இச்சந்தர்ப்பத்தைக் கொடுத்த கூட்டணி நண்பர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு உங்களை மீண்டும் அன்பாகப் பணிவாக வேண்டு கின்றேன். உங்கள் அருமையான வாக்குகளை கூட்டணிக்கு உதய சூரியன் சின்னத்திற்கு - நேரேயும் கூட்டணி வேட்பாளர்களின் இலக்கத்திற்கு நேரேயும் புள்ளடியிட்டு மிகவும் பெரும்பான்மையாக வெற்றிபெறச் செய்ய வேண்டுமென மிகவும் பணிவாக வேண்டுகின்றேன்.

**நன்றி வணக்கம்**

இங்ஙனம்,

**எம்.சிவசிதம்பரம்.**

**(தலைவர், தமிழர் விடுதலைக்கூட்டணி)**

**தமிழர் விடுதலைக் கூட்டணி**

X

(C/13123)

## மீண்டும் மீண்டும் செல்லத் தூண்டும்!....



**MILLENNIUM RESTAURANT**

**மில்லேனியம் றெஸ்ரோறன்ற்**

ரசித்தவர்கள் பிரமித்துக் கொள்ள, ருசித்தவர்களை மீண்டும் மீண்டும் வரவழைக்க!....
யாழ்நகரில் இப்படியும் ஓர் இடமா??
மனதுக்கு இதமளிக்கும் ரம்மியமான பூஞ்சோலையின் நடுவே,
நாவுக்கு இதம் தரும் உள்ளம் பூரிக்கும்

* (B) புரியாணி * (F) பிறைட்றைஸ் * நூடில்ஸ்
சகல சுப் வகைகளும்

மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு உணவுவகைகளை உடனுக்குடன் ஓடர்செய்து
சுடச்சுட சுத்தமாகத் தயார் செய்து கொடுக்கும் ஒரே இடம்!

***என்றும் உங்கள் மனம் விரும்பும்***


## மில்லேனியம் றெஸ்ரோறன்ற்

(78692)

இல.70, இராமநாதன் வீதி, (யாழ்.பல்கலைக்கழக வீதி,) கலட்டி, யாழ்ப்பாணம்.


## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மண் உலகில் 02 - 09 - 1955



விண் உலகில் 24 - 09 - 1998

அமரர்

## தம்பிஜயா சற்குணானந்தன்

(மேற்பார்வையாளர், நீர் வேலைப்பகுதி, யாழ்.மாநகரசபை)

*திதி : 01-10-2000*

**இல்லத்தின் தலைவனாய்**
**இனிய வார்த்தைக்கு குருவாய்**
**எங்கள் மனதில் நீங்காத இடம் பிடித்த**
**எங்கள் அன்புத் தந்தையே**
**ஓரிரு ஆண்டுகள் கழிந்திடினும்**
**ஓயாது உங்கள் நினைவுகள் எம்மனதில்.**

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

**மனைவி, பிள்ளைகள்.**

*இராமலிங்கம் வீதி,*
*திருநெல்வேலி, கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

(78889)

# நல்லூர் பிரதேச.....

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

13. 5ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய, பல்கலைக் கழகத்துக்குத் தெரிவான மாணவர்களுக்கான ஊக்குவிப்பு நன்கொடை — 75,000.00
14. எமது சபைக்கு கோணாவளை வீதியில் உள்ள மேல்மாடியுடன் கூடிய வீடு கொள்வனவு — 2,000,000.00
15. மனோன்மணி சனசமூக நிலையம் புனரமைப்பு கொக்குவில் கிழக்கு — 200,000.00
16. பொதுநூலகம் அமைத்தல் - கோண்டாவில் — 1,500,000.00

* **பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை - ரூ.1,000,000.00**

1. இராமகிருஷ்ணமிசன் வீதி, கல்லிட்டுத் தாரிடல் வேலை - கோண்டாவில் — 250,000.00
2. மாரியம்மன் வீதி, கல்லிட்டுத் தாரிடல் வேலை திருநெல்வேலி — 250,000.00
3. கோப்பாய் - இருபாலை வீதி, கல்லிட்டுத் தாரிடல் வேலை - கோண்டாவில் — 100,000.00
4. அமரகவி சனசமூக நிலைய வகுப்பறை அமைத்தல் - கோண்டாவில் மேற்கு — 250,000.00
5. அமரகவி சனசமூக நிலைய குழாய்க் கிணறு அமைத்தல் - கோண்டாவில் மேற்கு — 25,000.00
6. நூலகங்களுக்குப் புத்தகம் வழங்கல் - திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் — 100,000.00
7. மலகூடங்கள் அமைத்தல் - கலைவாணி சனசமூக நிலையம் கொக்குவில் மேற்கு — 25,000.00

### புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை, வடக்கு - கிழக்கு (றான்) நிதி

1. கோண்டாவில் அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் கோயில் புனரமைப்பு — 1000,000.00

### புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை வடக்கு - கிழக்கு (றான்) நிதி

1. உடையார் வீதி - கொக்குவில் கிழக்கு — 400,000.00
2. பிடாரி கோயில் மேற்கு வீதி - கொக்குவில் - மேற்கு — 250,000.00
3. ஐயனார் வீதி - கொக்குவில் மேற்கு — 285,000.00
4. பொற்பதி முருகாம் ஒழுங்கை - கொக்குவில் கிழக்கு — 256,000.00
5. செம்பாடு வீதி - கொக்குவில் கிழக்கு — 170,000.00
6. பொன்னையா வீதி - கொக்குவில் மேற்கு — 345,000.00
7. கலைமகள் வீதி - நல்லூர் வடக்கு — 360,000.00
8. வீரபத்திரர் வீதி - கோண்டாவில் வடக்கு — 200,000.00
9. நாராயணா குறுக்கு வீதி - கோண்டாவில் கிழக்கு — 105,000.00
10. குமரகோட்டம் வீதி - கோண்டாவில் கிழக்கு — 145,000.00
11. கொக்குவில் சனசமூக நிலையம் 3ஆம் கட்ட வேலை - பிரம்படி கொக்குவில் — 150,000.00
12. ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் - கோண்டாவில் கிழக்கு — 100,000.00
13. ஞானவீர சனசமூக நிலையம் - கோண்டாவில் — 100,000.00
14. மகமாஜி சனசமூக நிலையம் - கொக்குவில் கிழக்கு — 50,000.00
15. வேதபாராயணா சனசமூக நிலையம் - கோண்டாவில் மேற்கு — 100,000.00
16. பாரதி சனசமூக நிலையம் - திருநெல்வேலி — 50,000.00
17. திருநெல்வேலி சந்தை புனரமைப்பு — 5,000,000.00

* வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலம் செய்யப்பட்ட வேலைகள்

- * மானிப்பாய் இணுவில் அன்னங்கை ஒழுங்கை — 800,000.00
- * இராமநாதன் வீதி - திருநெல்வேலி — 702,000.00
- * பிறவுன் வீதி - கொக்குவில் — 1,000,000.00
- * பிரம்படி வீதி - கொக்குவில் — 700,000.00
- * மணியகாரர் வீதி - கொக்குவில் வீதி — 500,000.00
- * குமரகோட்டம் வீதி - கோண்டாவில் — 885,000.00
- * அம்மன் வீதி - திருநெல்வேலி — 450,000.00
- * சிவன் வீதி - திருநெல்வேலி — 688,000.00
- * சட்டநாதர் வீதி - நல்லூர் வடக்கு — 715,000.00

### மேலும் எம்மால் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள வேலைகள்

1. உயரப்புலம் வீதி - பொன்னையா வீதி வரை கல்லிட்டுத் தாரிடல் வேலை கொக்குவில் மேற்கு — 325,000.00
2. முத்தட்டுமட வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை - கோண்டாவில் மேற்கு — 225,000.00
3. சைவப் பாடசாலை வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை - கோண்டாவில் மேற்கு — 225,000.00
4. கலட்டி வீதி, மதகு கல்லிட்டுத் தாரிடல் வேலை - கோண்டாவில் மேற்கு — 340,000.00
5. செபஸ்ரியார் வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை - கோண்டாவில் கிழக்கு — 400,000.00
6. வைரவர் கோயில் வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை - கோண்டாவில் கிழக்கு — 435,000.00
7. தில்லையம்பதி வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை - கோண்டாவில் வடக்கு — 90,000.00
8. ஆலடி வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை - கோண்டாவில் கிழக்கு — 215,000.00
9. செங்குந்தா வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை - திருநெல்வேலி கிழக்கு — 350,000.00
10. புதிய செங்குந்தா வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை - திருநெல்வேலி கிழக்கு — 210,000.00
11. சேச் வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை - திருநெல்வேலி கிழக்கு — 225,000.00
12. பூநாறி மர வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை - கொக்குவில் மேற்கு — 455,000.00
13. பூநாறி மர வாய்க்கால் - கொக்குவில் மேற்கு — 120,000.00
14. ஞான பாஸ்கரோதயா வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை — 200,000.00
15. அச்சுக்கூட வீதி கல்லிட்டுத் தாரிடல் வேலை - கொக்குவில்கிழக்கு — 215,000.00

### மேலும் சில வேலைத் திட்டங்கள்

- * பின்தங்கிய பகுதிகளுக்கான வீதி அபிவிருத்தித் திட்டம் (கொக்குவில், திருநெல்வேலி, கோண்டாவில்) — 3,000,000.00
- * பின்தங்கிய கிராமங்களுக்கான மின் விநியோகம் (கொக்குவில், திருநெல்வேலி, கோண்டாவில்) — 600,000.00
- * இடம்பெயர்ந்து எமது பிரதேச எல்லைக்குள் வசிக்கும் மக்களுக்கான உடுபுடைவை, பாவனைப்பொருள்கள், போசாக்குணவு, மருந்துவகை விநியோகம் — 300,000.00
- * கொக்குவிலில் ஆயுர்வேத வைத்தியசாலை திறந்து வைக்கப்பட்டது
- * கோண்டாவிலில் ஆயுவேத வைத்தியசாலை திறந்து வைக்கப்பட்டது.
- * சிறுவர் நிறைவாழ்வு இல்லத்திற்கு இலவச மரக்கறி, தலையணை, பெற்சீற் விநியோகம், திருநெல்வேலி
- * இடம்பெயர்ந்த மக்களின் சுகாதார அடிப்படை வசதி செய்து கொடுத்தல் (கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி)
- * பிரதேச எல்லைகளில் வீதி வளைவுகள் அமைத்தல் - 4
- * வீதியோர நடைபாதை அமைத்தல், திருநெல்வேலி
- * கலைஞானி அவர்களால் சேகரிக்கப்பட்டுள்ள தொல்பொருள்களை பாதுகாத்தல்

(C/13132)

# மாநகரப் பகுதிக்குள் புதிதாக
# 35 பஸ்தரிப்பு நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 1
யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பகுதியில் 35பஸ் தரிப்பு நிலையங்களை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி நிதியத்தின் கீழ் பின்தங்கிய நிலையில் உள்ள பிரதேச, சமூக, போக்குவரத்து அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படையில் வடக்கு — கிழக்கு மாகாண சபையால் ஒதுக்கப்பட்ட 8 லட்சத்தி 50 ஆயிரம் ரூபா நிதி மூலமே பஸ்தரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வருவதாக மாநகர சபையின் ஆணையாளர் வெ. பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

மாநகரசபை எல்லைக்குள் அமைக்கப்பட்டு வருகின்ற பஸ்தரிப்பு நிலையங்களின் விவரங்கள் வருமாறு:—

★ காங்கேசன்துறை வீதியில் 8 பஸ் தரிப்பு நிலையங்கள்.
★ கண்டி வீதியில் 8 பஸ் தரிப்பு நிலையங்கள்.
★ பருத்தித்துறை வீதியில் 8 பஸ் தரிப்பு நிலையங்கள்.
★ காரைநகர் வீதியில் 6 பஸ் தரிப்பு நிலையங்கள்.
★ பலாலி வீதியில் 5 பஸ் தரிப்பு நிலையங்கள்.

இவற்றை அமைக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-10-ரி)

## நிரந்தர நியமனம் வழங்கக் கோரிக்கை

சண்டிலிப்பாய், ஒக். 1
வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் ஒன்பது முன்பள்ளிகள் இயங்கி வருகின்றன. இந்த முன்பள்ளிகளில் பணியாற்றி வரும் ஆசிரியர்கள் நிரந்தர சேவையில் இதுவரை உள்வாங்கப்படவில்லை என்றும்- இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறும் — யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு ஊடாக, வடக்கு — கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளரிடம் பிரதேச சபை நிர்வாகம் கடிதமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(ஐ-135)

## அறிவித்தல்

பருத்தித்துறைப் பிரதேச சபை

### ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி வருடாந்த மஹோற்சவம் 2000

மேற்படி மஹோற்சவ காலத்தில் வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சுற்றாடலில் வியாபார நிலையங்கள் அமைத்தல், வாகனங்களில் கொண்டு சென்று வியாபாரம் செய்தல், சாதாரணவியாபாரம் செய்தல், துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் அமைத்தல், ஆகியவற்றை மேற்கொள்வோர் ஆலய நிர்வாகத்திடம் இட அனுமதியைப் பெற்று எமது பிரதேச சபையில் அதற்கான உரிமத்தைப் பெற்ற பின்னரே வியாபாரத்தை மேற்கொள்ளலாமென இத்தால் அறியத்தருகின்றேன்.

ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் ஜே.பி.யூ.எம்.
தவிசாளர்,
பருத்தித்துறைப் பிரதேச சபை.

பருத்தித்துறைப் பிரதேச சபை,
புலோலி.
28—09—2000 (சி/13139)

## சிறார் மகிழரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 1
சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு திருமறைக் கலாமன்ற சிறுவர் கலைக்கூடம் நடத்தும் 'சிறார் மகிழரங்கு' நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 2 30 மணி வரை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

(க)

## கொலை என தீர்ப்பு

மட்டக்களப்பு, ஒக். 1
கடந்த 12 ஆம் திகதி படையினரின் சூட்டுக்கு இலக்காகிப் பலியான இரண்டு இளைஞர்களின் மரணங்களும் கொலைகள் என மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் கே. விஸ்வநாதன் தீர்ப்பளித்தார்.

பதில் மாவட்ட நீதிவானால் ஏற்கனவே வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்பு குறித்து ஆட்சேபம் தெரிவித்து சாதாரண சட்டத்தின் கீழ் காத்தான்குடி பொலீஸாரால் கோரப்பட்ட மீள் மரண விசாரணையின் மீதான தீர்ப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பான மேலதிக விவரங்களைப் பெறுவது பொலீஸாரின் பொறுப்பு என்று நீதிவான் தெரிவித்தார்.

(இ-8)

## கோண்டாவிலில் அரச களஞ்சியம்

யாழ்ப்பாணம், ஒக். 1
அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் கோண்டாவிலில் நிறுவப்பட்ட புதிய அரச களஞ்சியத்துக்கான பால் காய்ச்சும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன், திட்டப்பணிப்பாளர் செ. மகாலிங்கம் உட்பட யாழ். செயலக அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் களஞ்சியத்தை அமைப்பதற்கு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் 11 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

(இ-5)

## கிராம சங்க புனரமைப்பு கூட்டம்

சண்டிலிப்பாய், ஒக். 1
வட்டுக்கோட்டை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்புக் கூட்டம் கடந்த வாரம் வட்டு.வடக்கு கிராம அலுவலர் தலைமையில் நடைபெற்றபோது புதிய நிர்வாக சபைத் தெரிவு செய்யப்பட்டது. பல முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

வலிகாமம் மேற்கு பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா. தியாகமூர்த்தி இக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

(ஐ-135)

## ஓராண்டு நினைவஞ்சலி



| | |
|---|---|
| மலர்வு | உதிர்வு |
| 01 | 13 |
| — | — |
| 11 | 10 |
| — | — |
| 1963 | 1999 |

### அமரர் கந்தையா சிவகுமார்
(சிவா)

மாதங்கள் பன்னிரண்டு மாயமாய்
மறைந்து ஆண்டு ஒன்று ஆனதே!
ஆண்டொன்று ஆனாலும் ஆறாது எம்நெஞ்சம்;
அகலாது உங்கள் நினைவு.

உங்கள் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்ப் பூக்களோடு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாய், தந்தை,
மனைவி, மகள்,
சகோதரர்கள்.

3/5, பிரப்பங்குளம் லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (78864)

## முதலாம் மாத நினைவஞ்சலி

30 — 08 — 2000 ஆம் திகதி கொழும்பில் காலமான உடுவில் கிழக்கைச் சேர்ந்த ஏழாலை மகாவித்தியாலய முன்னாள் உப அதிபர்

### திருமதி ஜெகசோதி சத்தியமூர்த்தி

அவர்களை இன்றைய தினம் நினைவு கூர்ந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம.

செல்வி லலிதா நாகலிங்கம்,
திருமதி இ. பாலசிங்கம் (றட்னேஸ்).

நாவக வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (78897)

## 36 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் கணபதிப்பிள்ளை - கிருஷ்ணர்
(சின்னையா)

| | |
|---|---|
| தோற்றம் | மறைவு |
| 1920 - 06 - 29 | 2000 - 08 - 27 |

மாவிட்டபுரம் வீதி ''யாம்பரை'' கீரிமலையை நிரந்தர வசிப்பிடமாகவும், வடலியடைப்பு பண்டத்தரிப்பைத் தற்காலிக வாழ்விடமாகவும் கொண்டு 27 - 08 - 2000 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத்தலைவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கீரிமலை நகுலேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
பூட்டப்பிள்ளைகள்.

வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. (78875)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| | |
|---|---|
| அன்னை மடியில்: | அரன் அடியில்: |
| 10 | 01 |
| — | — |
| 02 | 09 |
| — | — |
| 1937 | 2000 |

அமரர்

### கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி
(முன்னாள் ச. ச. நிலையத் தலைவர்)

01 - 09 - 2000 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விநாயகர் சதுர்த்தி கூடிய வேளையில் மண்ணுலக வாழ்வினை விட்டு விண்ணுலகு சென்ற எங்கள் அன்புத் தந்தையார் கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் (01-10-2000) இன்று ஞாயிற்றுக்கிழமை காலை எங்கள் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அன்றைய தினம் அவ்வைபவத்தில் யாவரும் கலந்து அவரது ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்குமாறும் அதன் பின்பு நடைபெறவிருக்கும் மதிய போசனத்தில் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு. (78990)

# மரண அறிவித்தல்கள்

## நல்லதம்பி அம்பலவாணர்

(முன்னாள் அதிபர், ஆபிலி தமிழ்க்கலவன் பாடசாலை, காரைநகர்)

இடைப்பிட்டி காரைநகரைப் பிறப்பிடமாகவும் தற்போது நாவலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி அம்பலவாணர் 28—9—2000 வியாழக்கிழமை நாவலப்பிட்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரத்தின் அன்புக் கணவரும் சிவராசா (லண்டன்), செல்வராசா, சுந்தரராஜா (நாவலப்பிட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(1-10-2000) ஞாயிற்றுக்கிழமை நாவலப்பிட்டியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. செல்வராசா
(மகன்)

இடைப்பிட்டி,
காரைநகர், (78969)

## இராசரத்தினம் மோகனராசா

(போண்டா)

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் மோகனராசா நேற்று (30-9-2000) சனிக்கிழமை திருச்சியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் இரத்தினேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகன் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. இரவீந்திரன் (அண்ணா)
ப. பாலகிருஷ்ணன் (மைத்துனர்)

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (78967)

## கந்தையா நடராசா

(ஓய்வுபெற்ற அதிபர், ஹாட்லிக் கல்லூரி)

காரைநகர் விளானையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா நேற்று 30 - 09 - 2000 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்

அன்னார் காலஞ்சென்ற கந்தையா — சிவகாமி தம்பதிகளின் அன்பு மகனும், மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், ஞானசம்பந்தன், சிவமலர், சிவனருட்செல்வன், சிவசக்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், மாலினி, சிவபாதம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியை இன்று (01-10-2000) ஞாயிற்றுக்கிழமை கனத்தை மயானத்தில்3.00 மணிக்கு நடைபெறும்.

இநத அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. சிவனருட்செல்வன்
(மகன்)

299, பலாலி வீதி,
திருநெல்வேலி தெற்கு,
திருநெல்வேலி. (78966)

## குருநாதர் கந்தையா சோமநாதன்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குருநாதர் கந்தையா சோமநாதன் நேற்று (30- 09- 2000) சனிக்கிழமை காலை சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான குருநாதர் கந்தையா பொன்னம்மா தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்ற கிழக்கான் கார்த்திகேசு செல்லம்தம்பதிகளின் இளைய மருமகனும் யோகம்மாவின் அன்புக் கணவரும், தவமலர் (கொழும்பு), பாலசுப்பிரமணியம் (திட்டமிடல் பகுதி, வலயக் கல்வி அலுவலகம், வேலணை), தவலங்காமலர் (ஜேர்மனி), தவலங்கைநாதன் (சிவா, கொழும்பு), தவநேருமலர் (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், வன்னியசிங்கம் (கொழும்பு, ஆற்றுப் பள்ளத்தாக்கு முன்னாள் அபிவிருத்தி உத்தியோகத்தர், எம்பிலிப்பிட்டிய, அம்பாறை), விஜயமலர், கிருஷ்ணபிள்ளை (ஜேர்மனி, முன்னாள் உத்தியோகத்தர் இலங்கை மின்சார சபை, சுன்னாகம்), இராஜேந்திரம் (கனடா, முன்னாள் பொறுப்பதிகாரி, றெட்பானா, கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும், லண்டனைச் சேர்ந்த சுதாகரன், சதீஸ்கரன், சகலகலாதேவி, நாமகள், அசோக், ஜேர்மனியைச் சேர்ந்த சுஜீவாகரன், சசிகரன், ஐங்கரன் (வெனா, ஜீவகன் (கண்ணன்), கனடாவைச் சேர்ந்தவர்களான விஷ்ணுமோகன், சுகி, அஜித், அஜந், அருண், அஜீவ், பிரசன்னா, பிரசாந்த், பிரசாந்தி (துளசி) ஆகியோரின் அன்புப் பேரனாரும், லண்டனைச் சேர்ந்த சுகந்தரா, பிரியங்கா ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லமான 'யோகா வாசா' இணுவில் மேற்கில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (1-10-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00 மணிக்கு இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சோ. பாலசுப்பிரமணியம்
(மகன்)
சோ. தவலங்கைநாதன்
(சிவா, மகன்)

"யோகா வாசா",
இணுவில் மேற்கு, இணுவில். (78968)

# இன்று நடப்பவை

யாழ்ப்பாணம், ஒக். 1

புத்தூர், அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்4 மணிக்கு மேற்படி வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்துக்கு புத்தூர் பிரதேச சபை உப அலுவலகத்துக்கு உட்பட்ட சனசமூக நிலையத் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (க)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 1

பண்ணாகம் அம்பாள் கலைமன்றம் நடத்தும் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பண்ணாகம் விசவத்தனை ஆலய முன்றிலில் செ. தவச்செல்வம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகநுண்கலைத்துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும் சிறப்பு விருந்தினர்களாக தொல்புரம் கிராம அலுவலர் ம. சிறிமுருகவேள், சமாதான நீதிவான் மா. பாக்கியநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர். (க-28)

★ ★ ★

சர்வதேச சிறுவர் முதியோர் தினத்தை முன்னிட்டு கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஏற்பாடு செய்துள்ள முதியோர், சிறுவர் தினம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கப் பல்சேவை நிலையத்தில் சங்கத் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை சத்தியசீலனும் கலந்து கொள்வர். (க)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 1

நல்லூர் சயன்ஸ் அக்கடமி மாணவர்களுக்கான பரிசளிப்பும் கணிப்பீட்டு அறிக்கை வழங்கல் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மேற்படி நிறுவனத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை கலந்து கொள்ளுமாறு இயக்குநர் கேட்டுள்ளார். (க)

# நிறுவை அளவை உபகரணங்கட்கு முத்திரையிடல்

யாழ். செயலக நிறுவைகள் அளவைகள் திணைக்களத்தினால் நாளை திங்கட்கிழமையும், மறுநாள் செவ்வாய்க்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1. 30 மணி வரை தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பணிமனையில் தராசுப் படிகளுக்கு முத்திரையிடும் பணி நடைபெறவுள்ளது.

இப்பகுதியில் உள்ள சந்தை, மற்றும் கடை வியாபாரிகள், மில், பேக்கரி, விறகு காலைகள் ஆகியவற்றின் உரிமையாளர்கள் அனைவரும் தத்தமது நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறு யாழ். செயலக நிறுவை அளவைத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி கா. நாகலிங்கம் கேட்டுள்ளார். (30)

# நவராத்திரி நிகழ்ச்சிகள்

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் சைவ மங்கையர் கழகத்தினால் கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை முதல் நவராத்திரி பூசை நடத்தப்பட்டு வருகின்றது. வாணி விழாவைச் சிறப்பாகக்கொண்டாடுவதற்கு இக்கழகம் ஏற்பாடு செய்து வருவதாக கல்லூரி அதிபர் செல்வி பொ. கந்தசாமி தெரிவித்தார். (ஐ-135)

# அமரர் நமசிவாய தேசிகருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 1

மகாவித்துவான், இலக்கண வித்தகர் அமரர் இ. நமசிவாய தேசிகரின் மறைவை ஒட்டிய அஞ்சலி நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 30 மணிக்கு நெல்லியடி பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய அன்னபூரணி மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

அமரரின் திருவுருவப் படத்துக்கு மாலை சூட்டி, ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் நடைபெற்று தொடர்ந்து அஞ்சலி உரைகள் இடம்பெறும்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், பண்டிதர் க. சச்சிதானந்தன், புலவர்மணி அ. ஆறுமுகம், பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி நா. சண்முகலிங்கன், கவிஞர் மன்னவன் மு. கந்தப்பு, சைவப் புலவர் சு. செல்லத்துரை, கவிஞர் சோ. பத்மநாதன், பண்டிதர் வ. பேரின்பநாயகம், செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன், கவிஞர் கல்வயல் வே.குமாரசுவாமி, அதிபர் ஆ.சி நடராசா ஆகியோர் நிகழ்வில் அஞ்சலி உரைகளை நிகழ்த்துவர்.

சுட்டுவன், மயிலிட்டி தெற்கு வருத்தலைவிளான் பாலர் ஞானோதய சங்கம் இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளது. (க)

# தென்னந்தும்பு உற்பத்திக்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 1

வேலணை ப. தெ. வ. கூட்டுறவுச் சங்கத்தின் தென்னந்தும்பு உற்பத்தி நிலையத்துக்குப் பனை அபிவிருத்திச்சபையினால் ஏழரை வட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உற்பத்தி நிலையத்துக்குப் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் மு.பாக்கியநாதன் நேரில் விஜயம் செய்து உற்பத்தி நடவடிக்கைகளைப் பார்வையிடவுள்ளார். (இ-5)

# கட்டட வேலை பூர்த்தி

நெடுந்தீவு, ஒக். 1

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் கட்டட புனர் நிர்மாண வேலைகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. (க-28)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா குகதாசன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் அல்வாயை வதிவிடமாகவும் கொண்ட கட்டட ஒப்பந்தகாரர் பொன்னையா குகதாசன் நேற்று (30-09-2000) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையா - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற விஜயலிங்கம் - அன்னலக்ஷ்மி தம்பதிகளின் மருமகனும் விஜயவேணியின் அன்புக் கணவரும் கிருபாகரன் (இத்தாலி), குமணதாசன் குகவதி, சுபாசினி (இத்தாலி), கேமாவதி, திருமகள் (மாணவிகள், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), குபேந்திரன் (மாணவன், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருபாகரன் திரேசா, நாகலிங்கம் குமணதாசன் (எழுதுநர், யாழ். ப.நோ.கூ.ச.) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கிருபாகரன் கிருசாந்தின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று சனிக்கிழமை (30-09-2000) பி. ப. 3.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. குமணதாசன்
(மருமகன்)

"கேமாலயம்"
அல்வாய் தெற்கு,
அல்வாய். (78955)

## சின்னத்தம்பி இராமலிங்கம் (K.S.R.)

சாவகச்சேரி R.P.N. மில் உரிமையாளர் K.S. இராமலிங்கம் (K.S.R.) ஸ்கந்தபுரத்தில் நேற்று (30-9-2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும் நாகநாதன் (நோர்வே), பரமநாதன் (R.P.N. மில் சாவகச்சேரி), சரோஜினி, கமலநாதன் (திலகா ஜுவலர்ஸ், யாழ்ப்பாணம், ஜெகம் ஜுவலர்ஸ் ஸ்கந்தபுரம்), ரகுநாதன் (கனடா), வரதாமணி, புனிதவதி (ஓமான்) ஆகியோரின் அன்புத்தந்தையும், திலோத்தம்மை ஆனந்தரூபி ஜெகதீஸ்வரி, அனுஜெயா, நவனீதன் (பார்வதி மில் - சாவகச்சேரி), சிவநாதன் (ஓமான்) ஆகியோரின் அன்பு மாமனாரும், குமுதினி, குகநாதன் (லண்டன்), யோகினி, மனோகரன் (லண்டன்), காலஞ்சென்ற நிர்மலநாதன் மற்றும் குகநாதன், நந்தினி (நோர்வே), வினோதினி, குவேஸ்வரன் (மாத்தளை), பிரயாநாதன், சொரூபநாதன், கோகுலநாதன் (லண்டன்), கஜிந்திரன் (கொழும்பு), வஜிதா, கரிகரன், சாந்தன், ஜீரிகா, கவாஸ்கர், டிவாகர் (நீர்கொழும்பு), அபிதாப், அனோஜ் (கனடா), கோபகா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), சஞ்சீவ், ராஜீவ் (யாழ் பரியோவான் கல்லூரி), ஸ்வர்ணன், சாத்விகன் (ஓமான்) ஆகியோரின் அன்புப் பேரனும் விபுஷன், வேர்ஜினி, வைஷ்னவி, பைரவி, துஸாரிகா, துஸாரிகன், தாரிகா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கம் 191, ஸ்கந்தபுரம், கிளிநொச்சியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. நவனீதன் (மருமகன்)
(பார்வதி மில், சாவகச்சேரி)

'குமரவாஸா'
இல 7, டச்சு வீதி,
உடுவில். (78965)

## அரச ஊடகங்களில் தேர்தல் பிரசாரம்:

# அரசு தரப்புக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் சம சந்தர்ப்பம் தர நீதிமன்று உத்தரவு!

கொழும்பு,ஒக்.1

அரச ஊடகங்களில் தேர்தல் பிரசாரங்களின்போது அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் சமசந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்று கொழும்பு மேல் நீதிமன்றம் தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவு வழங்கியுள்ளது.

அரச ஊடகங்களான ரூபவாஹினி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஊடாகப் பிரசாரம் மேற்கொள்ளப் பாரபட்சம் காட்டப்படுவது தமது மனித உரிமைகளை மீறும் செயல் எனத் தெரிவித்து ஐ.தே.க. மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

இந்த வழக்கை நேற்றுமுன்தினம் விசாரித்த மேல் நீதிமன்ற நீதிபதி அரசுக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் அரச ஊடகப் பிரசாரத்தில் சம சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்று தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட்டார்.

(இ-3)

# வாக்காளர் அட்டை இன்றியும் வாக்களிக்கலாம்

தங்களது வாக்காளர் அட்டைகளைப் பறிகொடுத்தவர்கள் தேர்தல் தினத்தில் தங்களுக்குரிய வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிடப்பட்ட வாக்களிப்பு நிலையங்களுக்குச்சென்று வாக்காளர் பட்டியலைப் பார்வையிட்டு தமது வாக்களிப்பினை இவர்கள் செய்ய முடியும் என்றும் கூறப்படுகிறது.

கொக்குவில், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் வாக்காளர் அட்டைகள் இனந்தெரியாதவர்களினால் பறித்துச்செல்லப்பட்டது தெரிந்ததே.

இதேவேளை நேற்றுமுன்தினம் யாழ்.நகரின் பல பகுதிகளிலும் பொலீஸ் பாதுகாப்புடன் வாக்காளர் அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டன.

(இ-5)

# தாய்லாந்தை புலிகள் தளமாக பாவிப்பதை தடுக்க உதவவும்

## இலங்கை பௌத்த பிக்குகள் கோரிக்கை

பாங்கொக்,ஒக்.1

தமிழீழ விடுதலைப் புலிகள் நிதி சேகரிப்பதற்கும ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கும் தாய்லாந்தை ஒரு கேந்திர தளமாகப் பயன்படுத்துவதை தடுக்க உதவுமாறு அந்த நாட்டின் பிரதான மத குருவிடம இலங்கையின பௌத்த பிக்குகள பிரதிநிதிகள கோரிக்கை விடுத்துள்ளனர். தாய்லாந்துக்கு விஜயம மேற்கொண்டுள்ள இலங்கை பிக்குகள் தூதுக்குழு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இலங்கையும், தாய்லாந்தும் பௌத்த நாடுகள். புலிகள பௌத்தத்துக்கும பௌத்த நாகரிகத்துக்கும் முற்றிலும எதிரானவர்கள். பௌத்த மதத்தின புனிதத்தலங்கள மீதும், பௌத்த பிக்குகள மீதும அவர்கள் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை நடத்தியுள்ளனர் எனவே புலிகளின இந்த செயற்பாடுகளுக்கு தாய்லாந்தை பயன்படுத்துவதை தடுக்க உதவ வேண்டும் என இலங்கை பிக்குமார் தூதுக குழு கோரிக்கை விடுத்துள்ளது.

தாய்லாந்தில் புலிகளின் செயற்பாட்டைத் தடுக்க தன்னாலான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கத் தயாராக இருப்பதாக தாய்லாந்தின் பிரதம மதகுரு உறுதியளித்துள்ளார்.

(ஐ-4)

### சடலத்தை பொறுப்பேற்க கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ்.போதனா வைத்தியசாலையின் கண் சிகிச்சைப் பிரிவில் நேற்று அதிகாலை சடலமாக மீட்கப்பட்ட வயோதிபர் ஒருவரின் உடல், உறவினர்கள் பொறுப்பேற்பதற்காக பிரதேச அறையில் வைக்கப்பட்டுள்ளது.

அநாதரவான நிலையில் கண்டெடுக்கப்பட்ட இந்தச் சடலம் கரவெட்டி ஸ்ரீ நாரதா வீதியைச் சேர்ந்த முருகன் சின்னத்துரை (வயது73) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த வயோதிபரின் சடலத்தை உறவினர்கள் வந்து பொறுப்பேற்குமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(க-9)

### திறைசேரி பின்னடிப்பு

பனை அபிவிருத்திச் சபையின் தலைமைச் செயலகத்தை யாழ்ப்பாணத்தில் நிர்மாணிப்பதற்கு அரசினால் ஒதுக்கப்பட்ட நிதியை சபையிடம் வழங்குவதற்கு திறைசேரி பின்னடித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பனை அபிவிருத்தி சபையின் தலைமைச் செயலகக் கட்டடம் மற்றும் அதற்கான கொள்வனவு ஆகியவற்றுக்கு என ஜனாதிபதி செயலகத்தினால் 1998ஆம் ஆண்டு 48 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்தக் கட்டடம் அமைப்பதற்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் சபை அதிகாரிகளினால் காணி ஒன்று பார்வையிடப்பட்டு கொள்வனவுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் இதற்குரிய நிதி இது வரையும் வந்து சேரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-5)

## ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்த

# அலரிமாளிகையில் விசேட ஒலி,ஒளிபரப்புக் கருவிகள்

கொழும்பு,ஒக்.1

அலரிமாளிகையில் இருந்தபடியே நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி உரை நிகழ்த்த வசதியாக விசேட ஒலி, ஒளிபரப்புக் கருவிகள் அங்கு பொருத்தப்பட்டு வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்த வேண்டிய நேரங்களில் ரூபவாஹினி மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு செல்லவேண்டும் அல்லது அந்த நிறுவன அதிகாரிகள் கருவிகளை அலரிமாளிகைக்கு எடுத்து வரவேண்டியிருந்தது.

இதன் காரணமாக ஏற்படும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களைத் தவிர்க்கும் வகையில் அலரிமாளிகையிலேயே நிரந்தரமாக அந்தக் கருவிகள் பொருத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)


## ஆனந்தா ஸ்ரோர்ஸ் - மானிப்பாய்

தவத்திரு ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள்,
சுவாமி சச்சிதானந்த செல்லம்மா அம்மையார்
அவர்களின் அருள் ஆசியுடன்
கைதடி ஸ்ரீ சச்சிதானந்தா களஞ்சியம்
நிர்வாகத்தில் நடைபெறுகிறது

## ஆனந்தா ஸ்ரோர்ஸ்

இணுவில் வீதி, மானிப்பாய்.
(யாழ்.வீதி - நதியா ஜுவலர்ஸ் அருகில்)

* பலசரக்கு
* சைக்கிள் உதிரிப்பாகம்
* பரிசுப் பொருள்கள்
* ஆனந்தம் தயாரிப்புக்கள்

தொலைபேசி சேவை
உள்ளூர்: 021 - 2762 வெளியூர்: 0094 - 21 - 2762

குறிப்பு :
சுன்னாகத்தில் இயங்கும் ஸ்ரீ சச்சிதானந்த களஞ்சியம், திரு. த.புஸ்பராசா - லீலாவதி ஸ்ரோர்ஸ் கைதடி நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்.

மானிப்பாய். இ. குழந்தைவடிவேலு (J.P)

சித்த மருத்துவ நிபுணரின் ஆலோசனைப்படி
தயாரிக்கப்பெற்றது
ஆனந்தம் சீயாக்காய்பவுடர்
பாவித்துப் பயன்பெறுங்கள்

(78815)



# நாடாளுமன்றத் தேர்தல் - 2000

## யாழ்.மாவட்டம்



தர்மலிங்கம் சித்தார்த்தன்
இல: 5



கதிரவேற்பிள்ளை சுதாகரன்
(ஈரோஸ் சுதாமாஸ்டர்)
இல: 3

★ தமிழர்களின் தனித்துவமும் சுயமரியாதையும், தாயகக் கோட்பாடும் பாதுகாக்கப்படக்கூடிய தீர்வுக்காகத் தொடர்ந்து போராடுவோம்.

★ போரிடும் இரு தரப்பினர் மீதும் அழுத்தங்களைப் பிரயோகிக்கக்கூடிய, பேச்சுவார்த்தைக்கான சூழலை ஏற்படுத்தக்கூடிய மூன்றாம் தரப்பொன்றைக் கோரி இதய சுத்தியுடன் குரல் கொடுப்போம்.

★ இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருப்பவர்களினது அடிப்படை வசதிகளை உறுதிப்படுத்தவும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளவும் எமது அரசியல் பலத்தினை முழுமையாகப் பயன்படுத்துவோம்.

★ எமது மக்கள் முகங்கொடுக்கும் அன்றாட பிரச்சினைகளிலும் அபிவிருத்தித் திட்டங்களிலும் உறுதியுடன் செயலாற்றக்கூடிய ஊழலற்ற சிறந்த நிர்வாகத்தை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் சகல அரச நிர்வாக மட்டங்களிலும் ஏற்படுத்துவோம்.

## ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி
## (புளொட் - ஈரோஸ் சார்பாக)

X

(78905)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

HONDA PRESS CUP 50, Sony T.V. 2197 M.K. II Model அன்ரனாவுடன், V.C.R Nv-SD 235, குளிர்சாதனப் பெட்டி Sisil, Blender, பெண்கள் லுமாலா சைக்கிள், தையல் இயந்திரம் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு R.D.பாஸ்கர், செட்டி தோட்டம், ஆனைக்கோட்டை (சூளாவடி உப தபாலகம் அருகே உள்ள ஒழுங்கை). (78839)

## விற்பனைக்கு

ROOM AIR CONDITIONER - NATIONAL FAX MACHINE - PANASONIC JAPAN தயாரிப்பு SAUDI இல் இருந்து கொண்டுவரப்பட்டது. தொடர்பு: தி. சூரியகுமாரன், 70, காரைக்காட்டு லேன்,வண்ணார்பண்ணை. T.P-2961 (78888)

Morris minor 1000, volkswagon 1300 கார்கள் சிறந்த நிலையில் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-54,மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 3264, 2849. (78952)

## ஸ்கூட்டர் விற்பனைக்கு

நல்ல நிலையில் டாக்டரின் பாவனையிலுள்ள புதிய மொடல் பஜாஜ் ஸ்கூட்டர் (வெள்ளை நிறம்) விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தினசரி காலை 8.30 தொடக்கம் 12.30 வரை பார்வையிடலாம் தொடர்பு: மங்களபதி வைத்தியசாலை பண்டாரக் குளம் பிள்ளையார் கோயிலடி, நல்லூர். (78891)

## ஆடுகள் மலிவு விற்பனை

நல்ல இன ஜமுனாபாரி ஆடுகள், குட்டிகள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்றர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (78880)

## நாய்கள் விற்பனை

Dobermann Pincher ஒரு நாய்க்குட்டி 4000/-, Bulldog ஆண் நாய் 5000/= விற்பனைக்கு உண்டு. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்றர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (78882)

## மலிவுவிலையில் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள T.VS Champ மோட்டார் சைக்கிள் (பெற்றோல் பாவனையில் உள்ளது) மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: T. சங்கர், இல.566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C/13129)

## லவ்பேட்ஸ் விற்பனைக்கு

லவ்பேட்ஸ் (Love Birds) பச்சை நிறக் குருவிகள் மட்டும் விற்பனைக்குண்டு. ஞாயிறு காலை 10.00 மணிக்குப்பின்னர் வரவும். தொடர்பு: 67/43, தர்மலிங்கம் அவனியூ, கொட்டடி, யாழ்ப்பாணம். (78848)

## A/L பௌதிகவியல்

பௌதிகவியல் இணைந்த கணிதம் மிகச்சிறப்பாக பயிற்சிகள்பெற்று கற்பித்துவரும் ஆசிரியரினால் கற்பிக்கப்படும். மிகக்குறுகிய காலத்தில் ஏராளமான பயிற்சிகளுடன் முழுப்பாடத்திட்டமும் கற்பித்து முடிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் தொடர்பு:- தினசரி 3.00 மணிக்குப்பின்பு R.பாலசுப்பிரமணியம் B.Sc (Cey) Dip in. Ed. 17/1,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (78951)

## பொருளியல்

க.பொ.த. உயர்தரப் பரீட்சை 2000 வினாவிடை, பொதுப்பொருளாதாரம் மற்றும் பொருளியல் நூல்கள் யாழ்ப்பாண நகரம், நெல்லியடி, சுன்னாகம் புத்தகசாலைகளில் விற்பனையாகின்றன. ஆசிரியர்: வே.கருணாகரன். (78803)

## தவறிவிட்டன

திரு.குசரவணபவானந்தன் எனும் பெயரிட்டு வேலணைப் பாடசாலை முகவரியிடப்பட்ட மூக்குக்கண்ணாடி ஒன்று 26.09.2000 அன்று ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து இராசாவின் தோட்டம் வேம்படிச் சந்தி ஊடாக வேலணை செல்லும் வழியில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் 'சுமங்கலி' ஜுவலறி 118A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் ஒப்படைக்குமாறு வேண்டுகின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (78953)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக்கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-). தொடர்பு: பாரதி, 430,காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி - 3081. (C/13122)

## மரக்கன்றுகள் விற்பனை

மா, தேசி, தோடை, கமுகு, தென்னை, குறோட்டன், பூங்கன்றுகள், Concrete பூச்சாடிகள், மருந்து வகைகள் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்றர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (78881)

## வீடு விற்பனைக்கு

சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, பிரதான வீதிக்கு அருகில் அமைந்துள்ள வட்டு.கிழக்கில் வீடு ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: சி.மகாமயம், சிவன் கோயில் வீதி, சித்தன்கேணி. (78789)

## வீடு வாடகைக்குத் தேவை

அரச தொழில் புரியும் கௌரவமான சிறிய குடும்பத்துக்கு பொஸ்கோ பாடசாலை, நல்லூர், சந்திரபுரம் பகுதிகளில் வீடு வாடகைக்குத்தேவை. மே/பா.உதயன், வி.இல.1109.(78894)




# யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

## பொது மக்கள் கவனத்துக்கு

**இன்று தொடக்கம்:**

**450 கிராம் பாணின் உச்ச விலை 10 ரூபா.**

பாணின் விலை, நிறை, தரம் ஆகியவற்றில் குறைபாடுகள் இருப்பின் நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ தலைமைச் செயலகத்துக்குத் தெரியப்படுத்தவும்.

அங்கத்தவர்களுக்கு மட்டும்:

இடம்பெயர்ந்த சகல அங்கத்தவர்களும் உடனடியாகத் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தற்காலிக முகவரி:
"லக்சுமி வாசா"
குளப்பிட்டி றோட்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

நிர்வாகம்,
யாழ்.மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்.

(C/13144)


## உடன் விற்பனைக்கு

ரியூட்டறித் தளபாடங்கள், றோணியோ மெஷின் (கெஸ்ரெனர்), தட்டச்சு இயந்திரம் (தமிழ்) என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சம்பியன்லேன், (கொக்குவில் கே.கே.எஸ். வீதிப்பக்கத்திலிருந்து 3 ஆம் வீடு). (78823)

பிரத்தியேக வகுப்புகளுக்கும் ரியூட்டரிகளுக்கும் ஏற்ற வாங்கு மேசைகள், லேடீஸ் சைக்கிள்கள், சோதிடம், சித்த வைத்தியம், ஆங்கிலம் சுலபமாகக் கற்கக்கூடிய பல வகையான புத்தகங்கள் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: பரம்ஜோதி, 124/2, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். (78842)

## இறைச்சிக்கோழி

புறொயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. (1) இல.31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (2) பொன்னாலை வீதி, மானிப்பாய (விதானைவளவு). (78785)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1969 ஆம் ஆண்டு செவ்வாய்க் குற்றம் நிரம்பிய 5'3" உயரமான, நற்குணம் மிக்க, அழகிய, அரச தொழில் பார்க்கும் பட்டதாரி மணமகளுக்கு உள்நாட்டில் தொழில புரியும் தகுதியுடைய மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சகல விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல.1107 மே/பா உதயன். (78856)

## தவறிவிட்டது

பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய் எனும் முகவரியிடப்பட்ட குணரட்ணம் பிறேஜினா என்பவருடைய தேசிய அ.அட்டை (இல. 808450291v), விசேட அ.அட்டை (09 03004219) என்பன யாழ்ப்பாணத்துக்கும் இருபாலைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சுவஸ்திகா ரேஸ்ஸ், இருபாலைச் சந்தியில் ஒப்படைக்கவும். (78956)

## நவீன சந்தை திருத்த வேலைக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ்.நவீன சந்தையின் கூரை வேலை மற்றும் கட்டடத் திருத்த வேலைகளுக்கென 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியின் மூலம் நவீன சந்தையின் குறிப்பிட்ட ஒரு பகுதிக்கான வேலைகளே மேற்கொள்ளப்படவுள்ளதாக மாநகரசபை ஆணையாளர் வெ.பொ.பாலசிங்கம் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த நவீன சந்தையை முழுமையாகத் திருத்துவதற்கு 3 கோடி ரூபா நிதி தேவைப்படுவதாகவும் -

இதற்கான முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டபோதும் தற்பொழுது 50 இலட்சம் ரூபா நிதியே வழங்கப்பட்டுள்ளதாகவும் -

அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-10)

## கிராம அலுவலர் கைது

யாழ்ப்பாணம்,ஒக்.1

சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த கிராம அலுவலர் ஒருவர் தொழும்பில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் மேற்கு (ஜே-199) கிராம அலுவலரான முத்துக்குமாரு பாஸ்கரன் என்பவரே டம்பலப்பிட்டிப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சந்தேகத்தின் பேரில் குறிப்பிட்ட நபரைத் தாம் கைதுசெய்துள்ளதாக டம்பலப்பிட்டிப் பொலீஸார் யாழ்.அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளனர். (ஐ-10)

## வீடியோ திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள பட்டப்படிப்புகள் கல்லூரி மண்டபத்தில் இன்று நண்பகல் 12.30 மணிக்கு சூழல் சம்பந்தமான வீடியோ திரைப்படக்காட்சி காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வம் உள்ளவர்கள் அனைவரையும் வருகை தருமாறு கல்லூரி நிர்வாகம் கேட்டுள்ளார். (ஐ-ரி)


# வெள்ளி விழா

கொண்டாடவிருக்கும்

**தேவி அச்சகத்தினர்**

**பொன் விழாவையும் காண உளமார வாழ்த்துகின்றோம்.**

*விரைவில் தொடங்கவிருக்கும்*

# ஆசீஷன் தொலைத்தொடர்பு நிலையம்

(78960) 197B, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



## எங்கள் அன்பான பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்

வடமராட்சிக்கும் யாழ்.மாவட்ட மக்களுக்கும்
இலங்கை வங்கிக்கும் கிடைத்த
அருட்பிரசாதமும் வரப்பிரசாதமும்
எங்கள் அன்புக்கும் பெரும் மதிப்புக்குமுரிய
இலங்கை வங்கி யாழ்.பிரதேச முகாமையாளர்
**திரு.கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்**

அவர்கள் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளராகத் தனது உயர்ந்த எண்ணங்களாலும் புனிதமான, நீதியான செயற்பாடுகளை வங்கிக்கும் தனது வாடிக்கையாளர் பெருமக்களுக்கும் ஆற்றிய சேவைகளினாலும் இப்பதவி அவரை வந்தடைந்துள்ளது.

இவர் மென்மேலும் தனது சேவையினால் இன்னும் அதி உன்னதமான பதவிக்கு உயர்த்தப்பட்டு சிறப்புடனும் சீருடனும் வாழ இறைவன் இவருக்கு அருள் மழை பொழிய வேண்டி வாழ்த்துகின்றோம்.

**ராகுல சூரியன்ஸ்**
பிரதான வீதி, பருத்தித்துறை.

(C/13146)


# தேர்தலுக்கு சிற்றூர்திகள் ஒழுங்கு செய்தல்

யாழ்.மாவட்ட சிற்றூர்திச் சங்கத்தால் எந்த ஒரு கட்சிக்கும் சிற்றூர்திகள் ஒழுங்கு செய்து கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தலைவர்,
யாழ்.மாவட்ட சிற்றூர்தி சேவைச் சங்கம்.

(78963)

# பழைய மாணவர் சங்கம்
## சென்.ஜோன்ஸ் கல்லூரி
### யாழ்ப்பாணம்.

பழைய மாணவர் சங்க நிர்வாக சபைக்கூட்டம் நாளை (2-10-2000) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கல்லூரியில் நடைபெறும். நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

- செயலாளர்.

(C/13148)


ஆரம்பம்
06-06-1975

DEVI PRINTERS

போன்
2789

# வெள்ளி விழா

06-06-2000 அன்று கொண்டாட வேண்டிய எமது ஸ்தாபனத்தின் வெள்ளி விழாவை தவிர்க்க முடியாத காரணத்தால் 06-10-2000 ஆம் திகதி கொண்டாட எண்ணியுள்ளோம். அன்று மாலை 3 மணியளவில் ஒரு விருந்துபசாரம் நடத்த உள்ளோம். அவ்வமயம் வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் சமூகந்தந்து விழாவினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

# தேவி அச்சகம்

**114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

*(தேவி அச்சக ஒழுங்கை)*

(73961)

# ஊர்காவற்றுறை விடுவிக்கப்படாவிடில் தேர்தல் அங்கு கேலிக் கூத்தாகிவிடும்!

## ஆனந்தசங்கரி ஜனாதிபதிக்குச் செய்தி

யாழ்ப்பாணம்,ஒக்.1

"யாழ்ப்பாணத்தில் ஊர்காவற்றுறைத் தொகுதி ஈ.பி.டி.பியினரின் பிடியில் இருந்து விடுவிக்கப்படாவிட்டால் இங்கு தேர்தல் வெறும் கேலிக் கூத்தாகவே அமையும்." -

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்திருக்கும் 'பக்ஸ்' செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

இந்த விடயம் தொடர்பாகத் தங்களிடமும் (ஜனாதிபதியிடமும்) தேர்தல் ஆணையாளரிடமும் நாம் செய்த முறைப்பாடு தொடர்பாக உரிய நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

பொதுவாக ஊர்காவற்றுறைத் தொகுதியையும் குறிப்பாக நெடுந்தீவையும் விடுவிப்பது முக்கிய கடமையாகும்.

நாலாயிரத்து நூறு பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களைக் கொண்ட நெடுந்தீவில் இராணுவம், கடற்படை, பொலீஸ் எதுவும் இல்லாமல், அத்தீவுமுழுவதும் அரச சார்பு ஆயுதக் குழுவான ஈ.பி.டி.பியின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ளது. கடந்த சில வருடங்களாக அங்குள்ள மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

அங்கு கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஐ.தே.கட்சிக்கு வாக்களித்தவர்கள் என்று சந்தேகிக்கப்படுவோர் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களால் மிக மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

அங்கு அரச நிர்வாகத்துக்குப் பொறுப்பாக பிரதேச செயலர் பதவியில் ஓர் உதவி அரசாங்க அதிபர் உள்ளார். சில வருடங்களுக்கு முன்னர் நெடுந்தீவில் கடமையாற்றிய பிரதேச செயலர் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களால் அடித்துக் கொலை செய்யப்பட்டதாகக் கருதப்படுகின்றது. இது குறித்து இதுவரை அரசு ஏதும் நடவடிக்கை எடுக்கவில்லை; உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு நஷ்டஈடு வழங்கப்படவுமில்லை, குற்றவாளிகள் தண்டிக்கப்படவுமில்லை.

சில வருடங்களுக்கு முன்னர் சுருவில் பகுதியில் இளைஞர் ஒருவர் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது. நான்கு ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது. சந்தேகநபர்கள் நெடுந்தீவுக்குத் தப்பி ஓடினர். இந்தத் தீவின் மீதும் நியாயாதிக்கம் உடைய மாஜிஸ்திரேட் அந்தச் சந்தேக நபர்களைக் கைதுசெய்யப் பிடியாணை பிறப்பித்தார். பிடியாணை நிறைவேற்றப்படாததால் காரைநகர் கடற்படைத் தளத்துக்குப் பொறுப்பான அதிகாரியை மாஜிஸ்திரேட் நீதிமன்றுக்கு ஆணையிட்டு அழைப்பித்தார். நீதிமன்றில் ஆஜரான கடற்படைத் தளபதி ஊர்காவற்றுறைத் தொகுதியின் கீழ்வரும் நெடுந்தீவுக்குள் தாங்கள் நுழைய முடியாது என்பதை நிரூபிக்கும் ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். இந்த விடயம் மாஜிஸ்திரேட் இடம் மாற்றம் செய்யப்பட்டதுடன் முடிவுக்கு வந்தது.

ஜனாதிபதியாகிய தாங்கள் உட்பட யாராவது நெடுந்தீவுக்குச் செல்ல வேண்டுமானால் ஈ.பி.டி.பியின் அனுமதியைப் பெற்றேயாக வேண்டும்.

ஊர்காவற்றுறையின் ஏனைய பகுதிகளிலும் ஈ.பி.டி.பியின் பல முகாம்கள் உள்ளன - அவர்களின் ஆயுததாரிகளின் காவலுடன்.

அங்குள்ள அப்பாவி - வறிய - மக்கள் ஈ.பி.டி.பியின் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

இங்குள்ள ஈ.பி.டி.பியினருக்குப் புலிகளிடமிருந்து பாதுகாப்பு அளிக்கும் கடற்படைதான், ஈ.பி.டி.பியினரிடமிருந்து இங்குள்ள பொதுமக்களையும் பாதுகாக்க வேண்டியுள்ளது. இன்னமும் அங்கு ஈ.பி.டி.பியினரின் அக்கிரமங்களுக்கு யாரும் சவால் விடும் நிலை இல்லை. அவர்களின் ஆயுதம் தாங்கிய உறுப்பினர்கள் அப்பாவிப் பொதுமக்களை அச்சுறுத்தி மிரட்டி அடிபணிய வைப்பதே தொடர்கின்றது.

ஒரு பகுதி மக்களை இந்த ஆயுதக் குழு அச்சுறுத்தி அடக்கி வைத்திருப்பதை அரசு ஏன் அனுமதிக்கின்றது என அறிய விரும்புகிறோம். காரணம் இதுதான் கடந்த 1994 பொதுத் தேர்தலில் இந்த ஊர்காவற்றுறைத் தொகுதியில் பெற்ற வாக்குகளை வைத்துக் கொண்டு தான் 9 எம்.பி பதவிகளை ஈ.பி.டி.பி யால் பெறமுடிந்தது.

மொத்தம் 11 தொகுதிகளைக் கொண்ட யாழ்.மாவட்டத்தில் கடந்த பொதுத் தேர்தலின் போது பத்துத் தொகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தன. எஞ்சிய ஊர்காவற்றுறைத் தொகுதி மட்டும் ஈ.பி.டி.பியின் கட்டுப்பாட்டில் இருந்தது.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தொகுதிகளில் தேர்தல் நடைபெறாத நிலையில் அந்தப் பத்துத் தொகுதிகளிலும் ஆக 175வாக்குகளை மட்டும் பெற்ற ஈ.பி.டி.பி தேர்தல் கண்காணிப்பாளர்களின் அறிக்கைகளின் படி தவறான வழிகளில் ஊர்காவற்றுறை தொகுதியில் பெற்ற 10,000 வாக்குகளுடன் 9எம்.பி பதவிகளைப் பெற்றுக் கொண்டது.

ஜனநாயக வழிக்குத் திரும்பியதாகக் கூறப்படும் மற்றொரு ஆயுதக் குழுவான புளொட், இன்னொரு ஆயுதக்குழுவுடன் கூட்டுச் சேர்ந்து வன்னியில் 3ஆசனங்களைப் பெற்றது. கடந்த 6 ஆண்டுகளாக ஆட்சி செய்த பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு இந்த 12 உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதற்காக அவர்கள் கேட்டவை எல்லாவற்றையும் கொடுக்க முன்வந்தது.

இதே நிலைமையை எதிர்வரும் தேர்தலின் பின்னரும் எதிர் பார்க்கும் அரசு, அதற்காக அனைத்து ஜனநாயக முறைகளுக்கும் மாறாக இந்தக் குழுக்களுக்கு ஆதரவளிக்க சகல வழிகளிலும் முயல்கின்றது. தேர்தலின் போதும் சரி, அதற்குப் பின்னரும் சரி இந்தக் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்படமாட்டா என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அறிவித்திருப்பது எங்களுக்கு ஆச்சரியத்தைத் தருகின்றது.

இந்தக் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்படாவிட்டால் தேர்தல் நடத்துவதில் அர்த்தம் ஏதும் இல்லை. இந்தக் குழுக்கள் வெற்றி பெறுவதற்காக பொ.ஐ.மு அரசு சகல உதவிகளையும் வழங்குகின்றது.

ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்புக்கள் இப்போது கூட வழங்கப்படுகின்றன. ஈ.பி.டி.பியின் சிபார்சில் பல வேலைகளுக்குப் பெருந்தொகையான பணம் ஒதுக்கப்படுகின்றது. இது எங்களுக்குக் கவலை தரும் விடயமல்ல. எங்கள் விசனம் என்னவென்றால், இந்த ஆயுதக் குழுக்கள், குறிப்பாக ஈ.பி.டி.பி, அரசாங்கத்தின் உதவியுடன் அதிக ஆசனங்களைப் பெறுவதற்காக முறையற்ற உத்திகளைப் பிரயோகிக்க அனுமதிக்கப்படுவதுதான்.

ஊர்காவற்றுறைக்குச் சென்ற பல கட்சிகளின் வேட்பாளர்களும் ஈ.பி.டி.பியினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர் அல்லது திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன்- யாழ்.மாவட்ட தேர்தலில்வாக் களிக்க வருவோரின் ஆள் அடையாளத்தை நிரூபிக்க தேசிய அல்லது விசேட அடையாள அட்டையைச் சமர்ப்பிக்கும் படி கோருமாறு உத்தரவிடும் படியும் - இந்த ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைய முடியாவிட்டால், அவை யாழ்ப்பாணத்திலும் தீவகத்திலும் பரவலாக வைத்திருக்கும் முகாம்களை மூடி ஒரு மத்திய இடத்தில் முகாம் அமைத்துச் செயற்பட உத்தரவிடுவதற்கு அரசு பின்னிற்பதற்கான காரணங்களை வெளியிட வேண்டும் என்றும் -

நெடுந்தீவிலிருந்து ஈ.பி.டி.பியை அகற்றி, அங்குள்ள மக்களை அவர்களின் பிடியிலிருந்து அகற்றி அத்தீவை கடற்படையிடமாவது ஒப்படைக்கும் படியும் - .

இதற்கு மேலதிகமாக, அதிக எண்ணிக்கையான தேர்தல் கண்காணிப்பாளர்களை அரசு அங்கு அனுப்ப வேண்டும் என்றும் - அந்தச் செய்தியில் ஆனந்தசங்கரி கோரியுள்ளார்.

(உ)

# இலவச பாடநூல்கள் டிசம்பரில் கிடைக்கும்

## நேர காலத்துடன் எடுத்துவர ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.1

2001ஆம் ஆண்டுக்குரிய இலவச பாடநூல்களை யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலை களுக்கும் டிசம்பர் மாத இறுதிக்குள் முழுமையாக வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் புத்தகங்களைக் களஞ்சியப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார்.

இந்த நூல்களைக் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் துரிதமாக மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் தொகுதி தொகுதியாகவே இந்த நூல்கள் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்தன. இந்த வருடம் தேவையான பாடநூல்கள் அனைத்தும் முழுமையாக எடுத்துவரப்பட உள்ளதால் பாடசாலைகளுக்குத் தேவையான புத்தகங்கள் அனைத்தும் ஒரே தடவையில் வழங்கப்படும் என்று மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் ச.நா.தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார்.

கடந்த காலங்களில் பாடசாலைகளுக்குரிய நூல்கள் தாமதமாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தமையைக் கருத்தில் கொண்டே அடுத்த வருடத்துக் கான நூல்களை இந்த ஆண்டு முடியும் முன்னரே எடுத்து வருவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# அகதி முகாம்களின் பராமரிப்புக்கு 54 லட்சம் டொலர் பணம் செலவிடப்படும்

கொழும்பு,ஒக்.1

அமெரிக்க அரசினால் இலங்கைக்கு இலவசமாக வழங்கப்படவுள்ள 'கோதுமை மாவின் பெறுமதிக்குரிய பணத்தைப் போரால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ள நலன்புரி நிலையங்களின் பராமரிப்புக்கு இலங்கை அரசு பயன்படுத்தவுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தம் அண்மையில் இலங்கை நிதியமைச்சின் செயலாளர் பி.பி. ஜெயசுந்தரவுக்கும் கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் பொறுப்பதிகாரி டபிள்யூ. லெவிஸ் அம்செல்முக்கும் இடையே கைச்சாத்திடப்பட்டது.

அமெரிக்க அரசால் வழங்கப்படவுள்ள 45ஆயிரம் மெற்றிக் தொன் கோதுமை மாவின் பெறு மதிக்குரிய 54லட்சம் டொலர் பணத்தை நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் அத்தியாவசித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தொண்டு நிறுவனங்களிடம் இலங்கை அரசு பகிர்ந்தளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வறுமை ஒழிப்புக்கும் விவசாய அபிவிருத்திக்குமான பொது அடிப்படைத் திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்படவுள்ள இப் பணம் 'கெயர்', 'யுனிசெவ்', சிறுவர் பாதுகாப்பு நிதியம் மற்றும் இரட்சணிய சேனை இல்லம் ஆகிய தொண்டு நிறுவனங்களிடமே வழங்கப்படவுள்ளது.

தற்பொழுது வழங்கப்படவுள்ள 45ஆயிரம் மெற்றிக் தொன் கோதுமை மாவுடன் சேர்த்து இந்த ஆண்டு 85 ஆயிரம் மெற்றிக்தொன் மா அமெரிக்க அரசினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. தரமான இந்தக் கோதுமை மா விரைவில் இலங்கையில் மக்கள் பாவனைக்கு விநியோகம் செய்யப்படவுள்ளது.

(ஐ-10)

# 68 குடும்பங்கள் காரைநகருக்கு

வடமராட்சி,ஒக்.1

மீசாலை, மிருசுவில் ஆகிய பகுதிகளில் இருந்து வெளியேறி வடமராட்சி சென்றுள்ளோரில் 68 குடும்பங்கள் காரைநகரில் சென்று தங்க விருப்பம் தெரிவித்துள்ளன.

இவர்களைக் காரைநகரில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை ஐ.தே. கட்சியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் எஸ்.மகேஸ்வரன் மேற்கொண்டுள்ளார்.

இவர்கள் காரைநகரில் தங்குவதற்கான அனுமதியை வடக்கு கடற்படைத் தளபதி வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தக் குடும்பங்களை ஒரு வார காலம் பராமரிப்பதற்கான நிதியை ஐ.தே.க.தலைமைப் பீடம் வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

(ஐ-173)

# யாழ். பாடசாலைகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| ★ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை | - | 23(112) |
| ★ உடுவில் மகளிர் கல்லூரி | - | 22 (69) |
| ★ கோப்பாய் நாவலர் | - | 19 (63) |
| ★ கரவெட்டி மாணிக்கவாசகர் வி. | - | 17 (36) |
| ★ சுண்டிக்குளி மகளிர் | - | 17 (70) |
| ★ மகாஜனாக் கல்லூரி | - | 16 (51) |
| ★ சென் பற்றிக்ஸ் கல்லூரி | - | 15 (76) |
| ★ சென் ஜோன்ஸ் | - | 15 (79) |
| ★ மீசாலை வீரசிங்கம் வித்தி | - | 12 (61) |
| ★ சின்மய பாரதி வித்தி | - | 10 (46) |
| ★ திருக்குடும்ப கன்னியர் மடம் | - | 10 (41) |
| ★ தும்பளை சைவபிரகாச வித்தி | - | 10 (57) |
| ★ யாழ்.மத்திய கல்லூரி | - | 08 (56) |
| ★ ஆனைப்பந்தி மெ.மி.த.க. பாடசாலை | - | 07 (49) |
| ★ ஆவரங்கால் நடராஜா ம.வி. | - | 06 (41) |
| ★ தாவடி இ.த.க. பா. | - | 05 (29) |
| ★ புற்றளை ம.வி. | - | 05 (31) |
| ★ சுன்னாகம் இராமநாதன் கல்லூரி | - | 05 (28) |
| ★ இணுவில் மத்திய கல்லூரி. | - | 05 (63) |
| ★ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா. | - | 04 (64) |
| ★ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம். | - | 03 (23) |
| ★ கன்னியர் மட ம.வி. | - | 03 (43) |
| ★ சாவகச்சேரி டிறிபேர்க். | - | 02 (14) |
| ★ நல்லூர் காசிப்பிள்ளை ம.வி. | - | 02 (24) |
| ★ அளவெட்டி வடக்கு அ.மெ.த.பா. | - | 01 (59) |
| ★ வண்ணை நாவலர். | - | 01 (15) |

யாழ் மாவட்டத்தில் சுமார் 875 மாணவர்கள் இந்தப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

(ஐ-உ)

# சிறுவர் நாடக விழா

யாழ்ப்பாணம்,ஒக்.1

தீவக வலயமட்ட சிறுவர் நாடக விழா நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் முற்பகல் 9.30 மணிக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கோட்ட ரீதியாக நடைபெற்ற போட்டியில் தெரிவான 6 பாடசாலைகள் பங்குபற்றும் இந்த விழாவில் சிறப்பாற்றலைக் காட்டும் மாணவர்கள் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்கள். விழாவிற்கான ஏற்பாடுகளை ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்வரத்தினம் மேற்கொண்டுள்ளார்.

ஒக்ரோபர் முதலாம் வாரத்தை சிறுவர் வாரமாக பாடசாலை களில் அனுஷ்டிக்குமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (ஐ-ரி)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி,வடக்கு.ஒக்.1

வலிகாமம்கல்வி வலய சங்கானைக் கல்விக் கோட்ட பாடசாலை அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் நாளை திங்கட்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

### 14 வயதுப்பிரிவு

✪ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.

### 16 வயதுப்பிரிவு

✪ வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

### 18வயதுப்பிரிவு

✪ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் அராலி இந்துக் கல்லூரி.

(ஐ-ரி-86)

★ ★ ★

வலிவடக்கு,ஒக்.1

சங்கானைக் கல்விக்கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்று வந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் நாளை திங்கட்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் சங்கானை கல்விக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் சி. செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளை, சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

★ ★ ★

வலி,வடக்கு.ஒக்.1

வட மாகாண தாச்சி சங்கம் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில இன்று ஞாயிற்றுக்கிழமை ஞானப்பிரகாசர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டியில் மயிலிட்டி பாடும்மீன் விளையாட்டுக்கழகமும் சங்குவேலி வசந்தஸ்ரீ விளையாட்டுக் கழகமும் பங்குபற்றவுள்ளன. (ஐ-ரி-86)

# காணாமற் போன குருநகர்மீனவர்கள் வன்னியில்

குருநகர்,ஒக்.1

குருநகர் இறங்குதுறையில் இருந்து கடந்த மாதம் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை குடாக்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று கரை திரும்பாத குருநகர் மீனவர்கள் ஐவரும் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பகுதியில் தங்கி இருப்பதாக வன்னியில் இருந்து குருநகரிலுள்ள இம்மீனவர்களின் உறவினர்களுக்குத் தெரியவந்துள்ளது.

குருநகரைச் சேர்ந்த றிச்சேட் றெஜினோல்ட் (வயது27), அம்மா இவல் விஜயகுமார் (வயது23), தேவசகாயம் யூட் கிளமின்ரன் (வயது 24), ஸ்ரீபன்ஜோர்ஜ் ஜீவானந்தன் (வயது29) மரியநாயகம் குணதாஸ் (வயது23) ஆகியோரே தொழிலுக்குச் சென்ற பின் காணாமல் போயிருந்தனர்.

# ஆலோசனைக் கூட்டம்

யாழ்.மறைமாவட்ட மரியாயின் சேனையினருக்கான ஆலோசனைக் கூட்டம் இன்று ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயமண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-ரி)

# பாரதீய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த

# ஆறு பேர் அமைச்சரவையில் சேர்ப்பு!

## எரிபொருள் விலை உயர்வை எதிர்த்து மமதா பனர்ஜி ராஜினாமா

புதுடில்லி,ஒக.1

பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான இந்திய அமைச்சரவையில் புதிதாக ஆறு அமைச்சர்கள் நேற்று சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவர்களில் நால்வர் கபினட் அமைச்சர்கள். இருவர் இணை அமைச்சர்கள். இவர்கள் அனைவரும் பாரதீய ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர்களாவர்.

முன்னாள் முதல்வர் சுஸ்மா ஸ்வராஜ் தகவல் ஒளிபரப்புத் துறை அமைச்சராகவும்-

பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த உறுப்பினர் வேங்கையா நாயுடு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சராகவும் -

ஸ்ரீபத் ஜஸ்வநாயர் வேளாண்மைத்துறை அமைச்சராகவும் -

பொன்.இராதாகிருஷ்ணன் இளைஞர் நலன் விளையாட்டுத்துறை அமைச்சராகவும்-

வெளியுறவுத்துறை இணை அமைச்சராக கிருஷ்ணன் ராஜூவும், இரசாயன உரத்துறை இணை அமைச்சராக சத்திரப்பிரதா முஹார்ஜியும் பொறுப்பேற்றனர்.

இவர்கள் ஆறுபேரும் நேற்று மாலை ஜனாதிபதி முன்னிலையில பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இதேவேளை -

எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து மத்திய ரயில்வேத்துறை அமைச்சர் மமதா பனர்ஜியும், வெளியுறவுத் துறை இணை அமைச்சர் அஜித்குமார் பாஞ்சாவும் தமது பதவிகளை நேற்று ராஜினாமாச் செய்தனர்.

இவர்களது பதவி விலகல் கடிதங்களை பிரதமர் ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.


(78242)

வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!!



(ஈ.பி.டி.பி.)

இரத்தம் தோய்ந்த நிலத்தில் நடக்கின்றோம்,
நித்தம் இதுதான் எங்கள் வாழ்வோ?
யுத்தம் நீங்கி, நிம்மதியாக வாழ
அளித்திடுங்கள் உங்கள் வாக்குகளை
வீணைச் சின்னத்துக்கே!

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்களது பெரும் முயற்சியினால் நவீன வசதிகளுடன் புதிய யாழ்.பிரதம தபால் அலுவலகத்தை 8 கோடி செலவில் அமைக்க அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.


## ஐரோப்பிய பிரதிநிதிகள் நேற்று கிழக்குக்கு விஜயம்

மட்டக்களப்பு,ஒக்.1

தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த இரு பிரதிநிதிகள் நேற்று மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களுக்கு விஜயம் செய்தனர்.

ஒல்லாந்து நாட்டைச் சேர்ந்த மரிய மெலினோனி, இத்தாலியைச் சேர்ந்த பி.கொஸ்ரிவ் ஆகிய இரு கண்காணிப்பாளர்களும் மட்டுமாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அசிவ பாதசுந்தரத்தை அவரது அலுவலகத்தில் சந்தித்து உரையாடினார்கள்.

மட்டக்களப்பில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் உள்ளவர்கள் வாக்களிப்பதற்கு செய்யப்பட்ட ஏற்பாடுகள் பற்றியும், தேர்தல் வன்செயல்கள் மற்றும் வேட்பாளர் விவரங்கள் தொடர்பாகவும் உதவித் தேர்தல் ஆணையாளரிடம் கேட்டறிந்து கொண்டனர். (ஐ-5-21)

### கற்பிட்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வப் பேச்சாளர் தெரிவித்தார்.

புலிகளின் தாக்குதலினால் கடற்படைப் படகு தீப்பற்றி எரிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

காணாமற்போன இரண்டு கடற்படை மாலுமிகளையும் தேடும் பணி கல்குடா கடற்பிரதேசத்தில் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5-8)

### சாவகச்சேரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆவணங்கள் பத்திரமாக மீட்கப்பட்டிருப்பதை அடுத்து தற்சமயம் பருத்தித்துறையில் இயங்கும் இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் வழமையான வங்கிச் சேவைகள் துரிதகதியில் ஆரம்பிக்கப்பட இருப்பதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. இதற்கான முன்னேற்பாடுகளைச் செய்ய வசதியாக இந்த வங்கிக்கிளை நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை வாடிக்கையாளர்களுக்கு மூடப்பட்டிருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியின் கிளையும் விரைவில் வழமையான வங்கிச் சேவைகளை ஆரம்பிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மே மாதம் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே யுத்தம் தீவிரமடைந்து சாவகச்சேரி உட்பட தென்மராட்சி பிரதேச மக்கள் இடம்பெயர்ந்த சமயம் மேற்படி இரு வங்கிக் கிளைகளிலும் ஆவணங்களைக் கைவிட்டு வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டது. (ஐ-5)

### வரணியில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொழுதைக் கழிக்க நேர்ந்தது.

இந்த மக்கள் விரும்பிய இடங்களுக்குச் செல்வதை அனுமதிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளரான எஸ்.மகேஸ்வரன் படை அதிகாரிகளிடம் கேட்டிருந்தார்.

நேற்றுக்காலை இந்த மக்கள் முள்ளிச் சந்தி ஊடாக வடமராட்சி செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

வரணிப் பகுதியில் இருந்து லொறிகளிலும் மற்றும் வாகனங்களிலும் ஏற்றிவரப்பட்ட இவர்கள் முள்ளிச் சந்தியில் சோதனையின் பின்னர் வடமராட்சிப் பகுதிக்குக் கொண்டு சென்று இறக்கப்பட்டனர்.

மழை பெய்து கொண்டிருந்ததால் மக்களைச் சோதனையிடும் பணியைத் துரிதமாக்குமாறு ஐ.தே.கவின் முதன்மை வேட்பாளர் மகேஸ்வரன் கேட்டுக் கொண்டதை அடுத்து மக்கள் வானங்களில் இருந்து இறக்கிச் சோதனையிடுவது நிறுத்தப்பட்டது. பருத்தித்துறையில் இருந்து கிராம அலுவலர்கள் இருவர் (முள்ளிப் பகுதிக்கு அழைக்கப்பட்டு அங்கு வைத்து மக்களின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டன.

அப்பகுதியில் மக்கள் தரித்து நிற்க வசதியாக அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினரால் கொட்டகை ஒன்றும் அமைக்கப்பட்டது.

கொடிகாமம், மிருசுவில், கச்சாய் பகுதிகளில் இருந்து நேற்று மேலும் பலர் வெளியேறி வடமராட்சி போய்ச் சேர்ந்தனர். நேற்று மாலை வரை சுமார் 3ஆயிரம் பேர் வடமராட்சிப் பகுதியை வந்தடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் பொது இடங்களிலும் உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் தங்கி உள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளர்களின் ஏற்பாட்டில் லொறிகளில் ஏற்றிவரப்பட்ட மக்கள் அவர்கள் விரும்பிய இடங்களில் கொண்டு சென்று இறக்கப்பட்டனர்.

மிருசுவில், படித்த மகளிர் குடியேற்றத் திட்டப் பகுதிகளில் இன்னமும் தங்கியுள்ளோர் இன்று அங்கிருந்து வெளியேறுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-173-109-8-5)

### சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,செப்.1

நவராத்திரி பூசையை ஒட்டி அல்வாய் வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலயத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

'அபிராமி' என்ற தலைப்பில் பருத்தித்துறை ஸ்ரீ சாரதாசேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா சொற்பொழிவாற்றுவார். (ஐ-173)

### அம்பாறையில் வாக்குச் சீட்டுகள் மாயம்

மட்டக்களப்பு,செப்.1

அம்பாறை மாவட்டச் செயலகத்திலிருந்து 658 வாக்குச்சீட்டுகள் நேற்றுக் காணமல்போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாக்குச் சீட்டுக்கள் காணமல் போனது தொடர்பாக செயலக அதிகாரிகள் மீது பொலீஸார் தீவிர விசாரணைகளை நடத்திவருகின்றனர். (ஐ-5)

### தென்மராட்சி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோள்காட்டி கொழும்புச் செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டது.

ஆனால் படைத்தரப்போ, கிளாலிப் கடற்படைத்தளத்தின் பாதுகாப்பு அரண்களைப் படையினர் தொடர்ச்சியாக - தந்திரோபாய உத்தியாக - மாற்றியமைத்ததைத் தவிர, பாரிய பிரதேச இழப்பு ஏதும் இல்லையென்று தெரிவித்ததாகவும் அச்செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டது.

கிளாலி, எழுதுமட்டுவாள், நாகர் கோயில் பகுதிகளில் நேற்றும் ஷெல் மற்றும் பீரங்கி, விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றதாகவும் அந்நிறுவனம் குறிப்பிட்டது.

ஆனால் இப்பிரதேசங்களில் தமது உறுப்பினர்கள் நன்கு ஊடுருவி தாக்குதல்களை நடத்தி வருவதாகப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை -

பரந்தன்,கிளிநொச்சி, ஆனையிறவுப் பகுதிகளிலும் நேற்று விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றதாக ஒரு தகவல் தெரிவித்தது. (உ-8)

### தவறுதலான வேட்டினால் காயம்

மட்டக்களப்பு,ஒக்.1

மட்டக்களப்பு - திருகோணமலை வீதியில் உள்ள சோதனைச் சாவடி ஒன்றில் நேற்று முற்பகல் 11 மணிக்கு பெண் பொலீஸார் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மாமாங்கம் லோகநாதன் (வயது 30) என்பவரே காயமடைந்தவராவார். இவர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-5-21)

### வேட்டினால் சிறுவன் பலி!

மட்டக்களப்பு,ஒக்.1

மட்டக்களப்பு வாவியில் குளித்துக் கொண்டிருந்தவர்களை நோக்கி நேற்றுக் காலை 10 மணியளவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான்.

வாவிக்கு அப்பால் உள்ள காவலரண் பக்கத்தில் இருந்தே வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அச்சமயம் வாவியில் குளித்துக் கொண்டிருந்த மட்டக்களப்பு நாவலடியைச் சேர்ந்த குணலிங்கம் குகதாசன் (வயது 14) என்ற சிறுவனே வயிற்றில் சூடுபட்டு உயிரிழந்தான்.

### ஜனாதிபதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யினர் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி அமைச்சர்களிடம் கூறி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது (ஐ-5-8-ரி)


தீகழ் கல்வி நிலையம்,
கே.கே.எஸ். வீதி, இணுவில்.
A/L 2001
கணக்கீடு- பங்குடைமை
S.தவா
B.Com. Hons (Au.Spe.)
ஆரம்பம்:
02.10.2000 Mon 6.15 a.m

எமது புதிய வீடியோ CD வெளியீடு
அர்ஜுன், மீனா
நடித்த
ரிதம்
(பிரதிகளை உடன் பெற்றுக் கொள்ளலாம்)
வீடியோ விமல்
யாழ்பாணம்.

சிந்து திரையரங்கம்
உரும்பிராய்ச் சந்தி.
அர்ஜுன், மீனா
மணிவண்ணன நடித்த
ரிதம்
(C.D.பிரதி)
காட்சிகள் 10.30., 3.00



### யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை
### புலமைப் பரிசில் பரீட்சை - 2000

எமது பாடசாலையிலிருந்து மேற்படி பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த 52 மாணவர்களின் புள்ளி விவரங்களை பாடசாலையில் பார்வையிடலாம் என்பதைப் பெற்றோருக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

- அதிபர்



அமோகமாக விற்பனையாகின்றது!
★ தீபாவளி நல்வாழ்த்து மடல்கள்
★ பக்திப் பரவசமூட்டும் சுவாமிப் படங்கள்
★ இளம் தலைமுறையினரை மெய்சிலிர்க்க வைக்கும் கண்கவர் சினிமா நட்சத்திர வாழ்த்துக்கள்
என்பவற்றை எங்களிடம் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம்.
(வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு)
பேப்பர் ஹவுஸ்
301., ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (78898)

மானிட விடியலுக்காகவும்
மகத்தான சமாதானத்துக்காகவும்
வாக்களிப்போம்!



த.சுபத்திரன் (றொபேட்)
இல. 3

சுயேச்சைக் குழு - 2



X



அ.வரதராஜப்பெருமாள்
இல. 1

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.)
(78901)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.